[தொ]குதி 7.] 1928ஞு செப்டம்பர்மீ 1உ [பகுதி 8.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட் குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாத ளுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியர் ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர் மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்ப சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" எ நாவல்கள் பூர்த்தியாகி இப்போது "இராஜாமணி அல்லது அபூர்வ மர்மம்" என்றநாவல் வெளியாய் வந்து இம்மாத முடிவுபெற்ற இச்சஞ்சிகையின் சுற்றில் 'இரத்தினபாய் அ இரகசிய சங்கப்" என்ற நாவல் தொடங்கப் பெற்றிருக்கி முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள் வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகை கள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியி கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பண அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்ச கைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தா லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக் கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

6 OCT.1928

அப்போது கேசவனும் மிக்க மனக்குழப்பமடைந்திருந்தாலும் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, "நம் புத்திரனோ சிறுவயதுடையவனாதலின் இந்தப் பெரிய பயங்கரமான கொடுஞ் செயல்களைப் பார்த்தவுடன் நடு நடுங்கிப் போயினான்; அவனைப்போலவே நாமும் இத்தருணம் மனங்கலங்கினால் இந்த ஆபத்தைவிட்டு நிவர்த்தியடைதல் முடியாது; நாம் இதுவரையிலும் நினையாமல் இப்போதேனும் தெய்வசிந்தனை செய்ததால் இப்போது பிழைத்திருக்கிறோம்; எதையும் யோசிப்பதற்குச் சிறிதும் சமயமும் வாய்த்திருக்கின்றது; ஆதலின், இவனுக்கு ஏதேனும் தேறுதல் சொல்லித் தேற்றிவிட்டுப் பின், நாம் பிழைப்பதற்கு ஏதேனும் மார்க்கம் அகப்படுமா என்பதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்யவேண்டும்" என்று துணிந்து சுப்பனைநோக்கி, "மகனே! நீ கோழைத்தனமாக இந்தச் சமயத்தில் தைரியத்தை விட்டுவிடாதே; 'சுருக்கத்தில் துணிவு' என்றபடி ஆபத்து வந்த சமயத்தில் எதற்கும் துணிந்து நிற்கவேண்டும்; நம் சிநேகிதர்களெல்லாம் மடிய நாம்மாத்திரம் தெய்வச்செயலால் உயிர்தப்பினோம். எனினும் நாமும் அடுத்த சமயத்தில் மடியவேண்டியவர்களே; எப்படியிருந்தாலும் மடியத்தான் போகிறோம். நம் நிலைமை அப்படியிருப்பதால் இந்த ஆபத்தினின்று தப்புவதற்கு ஏதேனும் முயற்சிசெய்வோம்; அஃதனுகூலப்பட்டால் பிழைத்தோடுவோம்; அப்படியின்றேல் மடிவோம்; இப்பொழுதென்ன யோசனை செய்யலாம்; சற்று ஆலோசித்துப்பார்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே சுப்பன் சற்று தெளிவடைந்து சிறிதுநேரம் யோசித்து, "நமக்கிந்தக் கட்டுகள் மாத்திரம் இல்லாதிருந்தால் இங்குப்படுத்திருப்

பவர்கள்மீது ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து இவர்களைக் கட்
டிப் போட்டுவிட்டேனும், கொன்று விட்டேனும் ஓடி
விடலாம்; இந்தக் கட்டுக்களை எப்படி நிவர்த்திசெய்யமுடி
யும் ?'' என்றான். கேசவன், “ மகனே ! நீ புத்திகலங்கி
யிருப்பதால் உன் யோசனை தப்பான மார்க்கத்தில் செல்
கின்றது. நாம் கட்டுக்களை அறுத்துக் கொண்டாலும்,
இங்கே படுத்திருப்பவர்களைக் கட்டிப்போடவோ, கொல்
லவோ முயற்சிப்பது பைத்தியக்காரத்தனமான யோசனை
யாகும்; அவர்கள் நம்மைக் காட்டிலும் மிக்க பலசாலி
கள்; நம்மை ஒரே அழுத்தில் அழுத்திக் கொள்வார்கள்;
ஒருசமயம் பலம் குறைந்தவர்களா யிருந்தாலும் நாம்
அவர்களைப் பிடித்துக்கட்டி வாயில் துணியடைக்கு முன்
சத்தம் போடுவார்களேயானால் உடனே மற்ற இராக்ஷதர்க
ளெல்லோரும் ஓடிவந்து நம்மைச் சூழ்ந்துகொள்வார்கள்.
ஆதலால், நாம் ஏதேனும் உபாயத்தால் கட்டையவிழ்த்
துக்கொண்டு சந்தடிசெய்யாமல் கதவைத்திறந்துகொண்டு
ஓடிப்போக வேண்டும்; அப்படி ஓடும்போது ஒரு சமயம்
இவர்கள் கண்டு துரத்தினாலும் மிக்க கதிகொண்டோடி
இவர்களிடம் அகப்படாமல் உயிரைக் காப்பாற்றிக்கொள்
ளலாம். அதிலும் அகப்பட்டுக்கொள்வோமானால், பின்
னர் நம் தலையெழுத்தின்படி எதுவும் நடக்கட்டும் '' என்
றான். சுப்பன் “ அப்படியானால் கட்டை யவிழ்ப்பதற்கு
என்ன தந்திரம் செய்யலாம் ?'' என்றான்.

கேசவன், “ நீ பேசாமலிரு; நான் அதைப்பற்றி யோ
சித்துப் பார்க்கிறேன் '' என்று கூறிவிட்டு ஆழ்ந்த சிந்த
னையி லிருந்தான். அவனைக் கட்டியிருந்த விடத்திற்குப்பக்
கத்தில் ஒரு கஜதூரத்தில் கொஞ்சம் கரிநெருப்புத்தழல்
கிடந்தது. அது முன்னே, நரமாமிசம் சுட்டுத்தின்றவர்க
ளால் எரிக்கப்பட்ட நெருப்பு. அது கேசவன், சுப்பன்

186528

இவர்களுடைய நல்லகாலத்தால் அணைந்து போகாமல் புகைந்துகொண்டே கிடந்தது. அந்த இராக்ஷஸர்கள் அதிக யூக மில்லாதவர்க ளாதலால், அந்நெருப்பால், கேச வன் முதலியவர்களுக்கு என்ன சகாயம் ஏற்படப்போகிற தென்று அதனை அணைக்காம லிருந்துவிட்டார்கள். இப் போது அந்நெருப்பே அவர்களுக்குப் பெருஞ் சகாயமாய் விட்டது. இதை வாசிப்பவர்க்கு நெருப்பென்ன சகாயஞ் செய்ததென்று அதிசயமாகவே யிருக்கும். எனினும் அது சாதாரணமான செய்கையாகவே பின்னால் விளங்கும். கேச வன் மேற்கூறியபடி சிறிதுநேரம் யோசித்ததும் அந்த நெருப்பை நோக்கினான். அப்பொழுதே ஒரு பெரிய தந்தி ரம் அவன் மனதிற் றோன்றிவிட்டது; அவன் முகம் சந்தோஷத்தால் பிரகாசித்தது. உடனே அவன், "ஆகா! இவ்வளவு எளிதான மார்க்கம் நமக்குச் சிக்கியிருக்கும் போது நாம் ஏன் வீணாக மனக்கலக்க மடைந்துகொண் டிருந்தோம்!" என்று மிக்க தைரியத்துடனே சுப்பனை நோக்கி, "புத்திரனே! இனி நாம் பிழைத்துக் கொள் வோம்; நீ பயப்படாதே" என்று சொல்லிவிட்டுக் கீழே உட்கார்ந்து அந்த நெருப்பின் பக்கம் தலையை நீட்டிப் படுத்தான். அவன் கைகள் ஒன்றாகச் சேர்த்து மணிக் கட்டுகளில் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. அதனால் கட் டினபடியே கைகளை ஒரு பக்கத்தில் நீட்டிக்கொள்ள வசதி யிருந்தது. கால்கட்டு கணுக்கால்களில் கட்டப்பட்டிருந் தது. அதனால், கால்களையும் கட்டியபடியே நீட்டிக்கொள்ள லாம். இடுப்பில் ஒரு கயிறுபோட்டு ஒருமுழ நீளம் இடை யில் விட்டு ஒரு மர முளையில் கட்டப்பட்டிருந்தது. அதனால் அவன் நிற்கவும், உட்காரவும், படுத்துக் கொள்ளவும் சௌகரிய மிருந்தது. இந்தச் சௌகரியத்தினாலேயே அவன் நெருப்புக்கு நேராகத் தலையை நீட்டிப்படுத்தான்.

7L
M121, N2 MM
1257:8

அப்படிப் படுத்தபின், கைகளையும் அந்நெருப்பின் பக்கமாகவே நீட்டினுன். அந்தோ! அவன் எண்ணம் பூர்த்தியாக வில்லை. அந்நெருப்பு கைக்கெட்டினுல் அதைக் கொண்டு ஓர் அனுகூலம் தேடிக் கொள்ளலாமென்று அவன் நினைத்தான். அந்நினைப்பின்படி கை நெருப்பின் சமீபத்தில் நெருங்கவில்லை. கைக்கும் நெருப்புக்கு மிடையில் ஒருசாண் தூரமே இடையிலிருந்தது. அதனுல் கேசவன், 'ஐயோ! நம்முயற்சி பலிக்காமற் போயிற்றே!' என்று மனமிளைத்துப் போனுன். அதனுல் கொஞ்சநேரம் மனக்கலக்க மடைந்திருந்தான்.

அப்படி யிளைத்தாலும் அந்தக் கேசவன், எதிலும் உயிர்க்கஞ்சாமலும், சிரமத்தைப் பாராமலும், மிக்க ஊக்கத்துடனும் வேலை செய்யக்கூடியவனுதலின், சிறிதுநேரம் சிந்தித்து, "இன்னும் ஒருசாண் தூரமே யிருக்கிறது; கொஞ்சம் பலங்கொண்டு உடம்பை முன்னேக்கிச் சிறிது சிறிதாக இழுத்துப் பார்த்தால் கொஞ்சம் கொஞ்சம் முன்னே நழுவிச் செல்லக்கூடும்; அப்படியே கொஞ்சநேரம் செய்துகொண்டிருந்தால் முடிவில் தீயின்மேல் கையைக் கொண்டுபோய் விடலாம்" என்று துணிவுகொண்டு அவ்வாறே மூச்சை அடக்கிக்கொண்டு வலுவாக உடம்பை நெருப்பின் பக்கமாக இழுத்து இழுத்து அசைத்துக் கொண்டிருந்தான். அதனுல் இடுப்பில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் முறுக்கு சிறிதுசிறிதாக நீண்டு கொடுத்தது. கொஞ்சநேரத்தில் நெருப்புக்கு இரண்டங்குல தூரத்தில் அவன் கை நெருங்கிவிட்டது. அவ்வாருகவே கேசவனுக்கு மிக்க தைரிய முண்டாகிவிட்டது. அவன், "இனி இருப்பது இரண்டங்குலமே; இதை ஒரே மூச்சில் கடந்து விடுவேன்" என்று முழுப்பலத்தையும் கூட்டி உடம்பை முன்னே யிழுத்தான். இடுப்புக் கட்டின் கயிற்றில் மொடு

மொடுவென்னும் சத்தம் கேட்டது. அது அதிகமாக முறுக்குவிட்டு நீண்டு கொடுத்துவிட்டது. உடனே அவனுடைய கை நெருப்புக்கு மேலே நடுப்பாகத்தில் போய் நின்றது. அப்பொழுது கேசவன் போனவுயிர் வந்துவிட்டதென்றே கருதினன்; தன் முயற்சி கைகூடியதற்காகக் கடவுளைத் துதித்தான். உடனே சிறிதும் தாமதிக்காமல், 'கை வெந்துபோனாலும் அந்த இரணத்தைப் பின்னால் ஆற்றிக் கொள்ளலாம்; இப்போது உயிர் தப்பினாற் போதும்' என்று துணிந்து கைகளின்மேல் கட்டப்பட்டிருக்கும் கயிற்றின் முடிப்புப்பக்கத்தை அந்நெருப்பின் மேற் படும்படி வைத்தான். அது சுவாலை விட்டெரியாத கரிநெருப்பா யிருந்தபடியால் மேலே நெருப்புச் சுடர் எழுந்து அவனுடைய கைகளிற்றாவி வேதனை செய்யவில்லை. அதனால் அவன் ஒரு பெரிய நெருப்புக் கங்கின்மேல் தன் கைக்கட்டின் முடிப்பை வைத்து நன்றாக அழுத்தினன். கட்டப்பட்ட கயிறு கற்றாழைநார்க் கயிறாதலால் இரண்டே நிமிஷத்தில் பொசுபொசு வென்றெரிந்து முடிப்பற்றுக் கட்டு நீங்கிவிட்டது; முடிவில் அவன் கையிலும் கொஞ்சம் நெருப்புபட்டுக் காய முண்டாகிவிட்டது. அதை அவன் பொருட்படுத்தவே யில்லை; கை முழுதும் வெந்து கருகி யிருந்தாலும்கூட அச்சமயத்தில் கவனிக்க மாட்டான். கயிறு பற்றியெரிந்து போனவுடனே கேசவன் கைகளைப் படீர் என்று உதறி யெடுத்துக்கொண்டான். இப்போது கைக்கட்டு நீங்கி விட்டது. அப்பொழுது கேசவன், "அப்பா! நாம் இப்பொழுது தான் மரணத்தின் வாயினின்றும் தப்பினோம்" என்று பெரிய மகிழ்ச்சி யடைந்தான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுப்பன் மகா ஆச்சரியமும், ஆனந்தமும், தைரியமும்

அடைந்து, "அப்பா! பிழைத்தோம்! பிழைத்தோம்!" என்றான். கேசவன், "அடே! அவசரப்படாதே; சந்தடி செய்யாதே; காரியம் கெட்டுப் போகும்; நம் வாயில் மண் விழுந்துவிடும்" என்று மெதுவாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னான். அவன் பயந்து கூறியதற்குத் தகுந்தபடி கதவோரம் படுத்திருந்த இரண்டு இராக்ஷதர்களுள் ஒருவன் முறுக்கு விட்டுக் கொண்டு புரண்டு படுத்தான். கேசவனுக்குப் பேரிடி விழுந்த மாதிரியாய் விட்டது. அவன் எங்கே விழித்துக் கொண்டானோ என்று கேசவன் கலங்கிவிட்டான். அவனும் சுப்பனும் பல்லைக் கடித்துக்கொண்டு மூச்சுவிடாமலிருந்தார்கள். நல்ல வேளையாய்ப் புரண்டு படுத்த இராக்ஷதன் விழித்துக் கொள்ளவில்லை. மீண்டும் குறட்டை விட்டு உறங்கிவிட்டான். அவனுடைய குறட்டைச் சத்தத்தைக் கேட்டவுடனே கேசவன் இதுதான் சமையமென்று துரிதமாக வேலை செய்யத் தொடங்கினான்: முன்னே கட்டப்பட்டிருந்த கை இப்போது கட்டறுந்து வேலை செய்ய உபயோகமாகிவிட்டது. அதனால் அவன் வெகு துரிதமாகக் கால் கட்டையும் அவிழ்த்து விட்டுப் பூனை போல் பதுங்கிச் சுப்பனிடம் சென்று அவனுடைய கட்டுக்களையும் ஒரு நிமிஷநேரத்தில் அவிழ்த்துவிட்டான். இவர்கள் துணிச்சலாக வேலை செய்து வெளியேறவேண்டும். இருவருக்கும் நெஞ்சு படபடவென் றடித்துக்கொண்டது. அவர்கள் நெஞ்சைத் தொட்டுப்பார்த்துக் கொண்டார்கள். கேசவன் சுப்பனுடைய செவியில், "மகனே! இப்போது நாம் மெதுவாகப் பதுங்கிப்போய்க் கதவைத் திறந்து, அங்கே படுத்திருப்பவர்களைத் தாண்டிக்கொண்டு வெளியேறி ஓட்டம் பிடிக்கவேண்டும்; அப்படி வெளியேறும் சமயத்தில் அவர்கள் விழித்துப் பிடித்தாலும் பலங்கொண்டு அவர்

களை உதறித் தள்ளி விட்டு ஓடவேண்டும்; நாம் அவர்களுடன் எதிர்த்துச் சண்டை செய்யவோ, நாம் முன்னே ஆயுதங்களைப் புதைத்து வைத்த இடத்திற்குச் சென்று அவற்றை யெடுத்துக் கொள்ளவோ நினைக்கக்கூடாது; ஒரே மூச்சாகத் திரும்பிப்பாராமல் இந்த எல்லையை விட்டே நெடுந்தூரத்திற்கப்பாலோடிவிட வேண்டும்; வீட்டின் கூரைமேலேறிச் செல்லலாமென்றாலும் பெரிய சந்தடியுண்டாகி இவர்கள் விழித்துக் கொள்வார்கள்; ஆதலின், இவர்களைத் தாண்டிக்கொண்டு வாயிற்படி வழியாகச் செல்வதே நலம்" என்று சொன்னான். சுப்பன் "அப்படியே செய்யலாம்; சீக்கிரம் இவ்வீட்டை விட்டு வெளிப்பட்டு விட்டால் மற்ற விஷயங்களைப் பின்னால் யோசித்துக் கொள்ளலாம்; அப்பா! சீக்கிரம்! சீக்கிரம்!!" என்றான். கேசவன் "ஜாக்கிருதை! ஜாக்கிருதை!!" என்று சொல்லிக்கொண்டே கொக்கு அடியெடுத்து வைப்பதுபோல் நடந்து சென்றான்; சுப்பனும் அவ்வாறே அவன் பின்னாற் சென்றான். இருவரும் அளவற்ற திகிலுடன் கதவருகிற் போய் சேர்ந்தார்கள். நல்ல காலமாக அந்த இராக்ஷதர்களிருவரும் கதவைத் திறப்பதற்கு அனுகூலமாகக் கதவை விட்டு ஒரு கஜதூரம் உட்பக்கத்தில் தள்ளியே படுத்திருந்தார்கள்.

கேசவன் இதுவும் தெய்வானுகூலந்தான் என்று நினைத்து மெதுவாகத் தாளைக் கழற்றிக் கதவைத் திறந்து சுப்பனை முதலில் வெளியில் தள்ளிவிட்டுத் தான் பின்னால் நடக்க ஆரம்பித்து ஒரு காலைத் தூக்கி நிலைப்படிக்கு முன்னே வைத்து உள்ளே யிருந்த மற்றொரு காலை வெளிப்படுத்துவதற்குத் தூக்கினான். அந்தோ! அச் சமயத்தில் சந்தேகமாகவே படுத்திருந்த அந்த இராக்ஷதர்கள் இருவரும் விழித்துக்கொண்டார்கள். இவர்கள் தப்பியோடு

வது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. உடனே, அந்த இராக்ஷதர்களில் ஒருவன், "ஆகா கொழுத்த ஆகாரம் தப்பியோடுகிறது" என்று அவர்கள் பாஷையில் கூவிக் கொண்டு, கேசவன், உள்ளே யிருந்து வெளியில் தூக்கி யெடுத்த மற்றொரு காலைக் கெட்டியாகப் பற்றிக்கொண் டான். உடனே கேசவன், "ஆகா! மோசம் நேர்ந்தது; மீண்டும் எமன் வாயிற் சிக்கிக்கொண்டேன்; சுப்பா! என்னை வலுவாகப் பற்றியிழு" என்றான். சுப்பன் விஷ யத்தைத் தெரிந்துகொண்டு தகப்பன் கையைப் பற்றிப் பலமாக வெடுக்கென்றிழுத்தான், கேசவனும், எதிரி கையில் அகப்பட்ட காலைப் பலங்கொண்டு உதறியிழுத் தான். பிடித்திருந்தவன் நெஞ்சில் பலமான ஓர் உதை விழுந்தது. இந்த உதையினுடைய அதிர்ச்சியாலும், அவன் படுத்திருந்தபடியே காலைப் பிடித்ததால் கையில் வலுவில்லாமற் போனபடியாலும், கேசவனுடைய காலை விட்டு விட்டான். காலை வேகங்கொண்டிழுத்த வேகத் தால் கேசவன் திடீரென்று வாயிற்படிக்கு முன் னால் கீழே வீழ்ந்து படீரென்று துள்ளியெழுந்து, வேடன் கையிலிருந்து தப்பிய மான்போல் விரைந்தோடி னான்; சுப்பனும் அவனைத் தொடர்ந்தோடினான். இதற் குள் அங்கே படுத்திருந்த இருவரும் வெளியிற் பாய்ந்து அவர்களுடைய பாஷையில், "பண்டிகைச் சமையலுக்குக் கட்டிப்போடப்பட்டிருந்தவர்கள் தப்பியோடுகிறார்கள்" என்று பெருஞ்சத்தமிட்டுக்கொண்டே அவர்களை துரத்தி யோடினார்கள். மற்ற வீடுகளில் படுத்திருந்த நரமாமிச பக்ஷணிகளும் அவர்கள்மீது ஞாபகமாகவே படுத்திருந் தார்களாதலின், அந்தச் சப்தத்தைக் கேட்டவுடனே எல் லோரும் படுக்கையை விட்டுப் பாய்ந்தெழுந்து ஆயுதங் களை எடுத்துக்கொண்டு 'காச்சு மூச்சு' என்னும் சப்தத்

துடன் திரண்டு அவ்விருவரும் ஓடின திக்கை நோக்கி ஓடினார்கள். ஊரைவிட்டு வெளியேறிச் சிறிது தூரம் செல்வதற்குள் யாவரும், கேசவனையும், சுப்பனையும் நெருங்கி விட்டார்கள். இருள் மிகுந்திருந்தாலும் இவர்கள் ஓடுவது அந்த இராக்ஷதர்களின் கண்ணுக்குத் தோற்றியது. அவ்விருவரும் ஓடுவதைக் கண்டவுடனே, அந்தக் காட்டு மிராண்டிகள், "இதோ ஓடுகிறார்கள்; விடாதீர்கள்; பிடியுங்கள்! பிடியுங்கள் !!" என்று ஆத்திரங்கொண்டு துரத்தினார்கள். கேசவனும், சுப்பனும் பிராணனுக்கஞ்சி யோடுகின்றவர்களாதலின், "அடே அப்பா; இந்தப் பூதங்களிடம் நாம் மீண்டும் அகப்பட்டால் இப்பொழுதே நம்மைப் பிய்த்துத் தின்று விடுவார்கள்" என்று பின்னங்கால் பிடரியில் படும்படி வாயுவேகம் மனோவேகமாக ஓடினார்கள். காட்டு மிராண்டிகளும் நரமாமிசத்தில் மிகுந்த இச்சை யுடையவர்களாதலால் இவர்களை எப்படியும் பிடிக்கவேண்டு மென்னும் ஆத்திரத்தால் இவர்களைப்போலவே விரைந்தோடித் துரத்தினார்கள். கேசவனும், சுப்பனும் எவ்வளவோ வேகங்கொண்டோடியும் இராக்ஷதர்களுடைய கண்களுக் கெட்டாமல் மறைய முடியவில்லை. இவர்கள், பயந்தோடும் முயல்களைப் போலவும், இவர்களைத் துரத்தும் காட்டு மிராண்டிகள், அம்முயல்களைத் தொடர்ந்தோடும் வேட்டை நாய்களைப் போலவும் விளங்கினார்கள். இராக்ஷதர்களுக்கு முன்னே, கேசவனும் அவன் மகனும் அதிக தூரத்திற்கப்பால் ஓடவில்லை. நாலைந்து கஜ தூரத்திற்கப்பாலேயே ஓடினார்கள். அதனால் அவ்விருவருக்கும், "சிறிது நேரத்திற்குள் நாம் இவர்கள் கையிற் சிக்கிக் கொள்வோம்" என்ற பீதி யுண்டாய் விட்டது. அவர்களுக்கு மேல்மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. உயிரில் நம்பிக்கை யில்லை. அப்போதவர்கள்,

"அந்தோ! நாம் இப்படித் துன்புறுவதைக் காட்டினும் இராக்ஷதர் கையிலகப்பட்டு மடிந்துபோனாலும் பாதக மில்லை" என்று நினைத்தார்கள்.

இப்படி அவர்கள் பலவிதமான கலக்கத்துடனே ஓடும்போது அந்தோ! 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்றபடி அவர்களுக்கு இன்னும் பெரிய இடையூறாக இடையில் குறுக்காக ஒரு பெரிய நதியின் வெள்ளம் கொந்தளித்து ஓடிக்கொண் டிருந்தது. அதன் இரைச்சல் செவியைத் துளைத்துக்கொண் டிருந்தது. அதைக் கண்டவுடனே அவர்களுக்குப் பெருந் திகிலாய் விட்டது. அவர்கள் வேறு பக்கங்களில் திரும்பினாலோ இராக்ஷதர்களிடம் அகப்பட்டுக் கொள்வார்கள்; அதனால் ஆற்று வெள்ளத்தில் பாய்ந்தே தீரவேண்டும்; வெள்ளத் தில் வீழ்ந்தாலோ இறப்பது நிச்சயம்; அவர்கள் ஒரு நிமி ஷம் நிதானித்தார்கள்; அதற்குள், "இராக்ஷதர்களிடம் அகப்பட்டுப் பயங்கரமான வாதனை யடைவதைக் காட்டி னும் ஆற்றில் வீழ்ந்து மடிவது நல்லதாகும்; வெள்ளத்தில் வீழ்ந்தால் ஒருசமயம் பிழைத்துக் கொள்ளவும் கூடும்" என்ற யோசனை அவர்களுக் குண்டாயிற்று. அந்த எண்ண முதிக்கவே கேசவன் சுப்பனை நோக்கி, "மகனே! வேறு யோசனை செய்யாதே; விரைந்து வெள்ளத்திற் பாய்ந்து விடு" என்று சொல்லிக்கொண்டே, கொந்தளித்தோடும் அவ்வெள்ளத்தில் தான் முன்னே பாய்ந்தான்; சுப்பனும் அப்பனுடன் குதித்துவிட்டான். மறு நிமிடம் அவர்க ளுடைய தோற்றமே யில்லாமல் மறைந்து விட்டது. அவர்களின் நிலைமையை அப்போது பார்த்தவர்கள் இறந்தொழிந்தார்களென்றே நிச்சயமாக நினைப்பார்கள்.

அந்த நரமாமிச பக்ஷணிகள், குறுக்கில் ஆற்று வெள்ள மிருப்பதால், கேசவனும், சுப்பனும் அதைத்

தாண்டியோட முடியாமல் அகப்பட்டுக் கொள்வார்கள் என்று கருதியே அவர்களை அவ்வாறு துரத்திவந்தார்கள். அவர்கள், தங்கள் எண்ணத்திற்கு முற்றும் விரோதமாக வெள்ளத்தில் வீழவே மனந்திகைத்து நின்றுவிட்டார்கள். ஏனெனில், நீர்ப்பெருக்கென்றால் அவர்களுக்குப் பொல்லாத பயம்; நீந்தத்தெரியாததால் அதன் சமீபத்திற் சென்றாலும் மரணம் சம்பவிக்குமென்று தண்ணீருக்கருகில் கூடச் செல்லமாட்டார்கள். ஆதலால், கேசவனும், சுப்பனும் ஆற்றிற் பாய்ந்தவுடன் அவர்கள் அவ்வாறு திகைத்து, “ஐயோ! இனி இவர்களை நாம் காணமுடியாது; இவர்கள் இறந்துவிட்டாலும் இவர்களுடைய உடம்பைக் கூடக் கண்டெடுத்துத் தின்னமுடியாது; நாம் அன்றைக்கே மற்றவர்களுடன் சேர்த்து இவர்களை அறுத்துத் தின்றிருக்கலாம்; அறிவில்லாத சிலர், ‘பண்டிகைக்கு வைத்துக் கொள்ளலாம்’ என்று சொல்லி இனிய கொழுப்புணவைக் கெடுத்துவிட்டார்கள்; மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் தாம் மிகுந்த கொழுப்புள்ளவர்கள்; இப்படிப்பட்ட மாமிசம் இனிக் கிடைப்பதரிதாகும்” என்று வயிற்றெரிச்சலுடன் திரும்பி ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

---

## 41—வது அத்தியாயம்.

இனி, ஆற்றில் குதித்த கேசவனும், சுப்பனும் என்ன கதியானார்களென்பதைப் பற்றிக் கவனிப்போம்: அவர்கள் அவ்வாறு உயிர் போனாலும் போகட்டுமென்று வெள்ளத்திற் பாய்ந்தவுடன் அவர்களுக்குண்டான அவஸ்தையை ஆண்டவனே அறிவான்! வெள்ளம் மிகவும் பள்ளத்தாக்கான விடத்தை நோக்கி அம்பிலுங் கொடிய வேகமாகப் பாய்ந்து சென்றதனால் நீர் கொந்தளித்து ஒரு

பனை உயரத்தில் மேலே கிளம்புவதும், பொறிவாணங்கள் போல நாலாபக்கங்களிலும் நீர்த்துளிகளைச் சிதறுவதும், பின்பு பூமியைத் துளைத்துக்கொண்டு கீழிறங்குவதும், இரு கரைப் பக்கங்களிலும் சுழன்று மோதுவதுமாய் மிக்க பயங்கரமாகச் சென்றுகொண் டிருந்தபடியால் அவர்களைப் பந்துபோல் எடுத்து மேலே யெறிந்தும், நரிக்குழிகளில் அமிழ்த்தியும், நீர்ச்சுழிகளில் இழுத்துச் செக்கிலிட்டு ஆட்டுவதுபோல் சுழற்றியும், மேடுகளிலும், கற்பாறைகளிலும், கரைப்பக்கங்களிலும் மோதியும், தலைகீழாகப் புரட்டியும், மணலிற்செருகி மேலே கிளப்பியும் படாத பாடெல்லம் படுத்திற்று. அவர்களுக்கு நீந்தத் தெரிந்திருந்தும் அதனல் ஒன்றும் பயன் ஏற்படவில்லை. நீரின் போக்கின்படி அவர்கள் போகக்கூடியவர்களா யிருந்தார்களே யன்றி நீந்துதலின் உதவியால் தங்கள் நோக்கம் போல் போகக்கூடியவர்களா யில்லை. அதனல், பலவிதமான உபத்திரவங்களோடு வெள்ளத்தால் சிறிது நேரத்துக்குள் வெகுதூரம் கொண்டுபோகப் பட்டார்கள். அவர்கள் எப்படியும் கொஞ்ச நாழிகைக்குள் இறந்துபோகக் கூடியவர்களா யிருந்தார்களே தவிர எவ்விதத்தும் பிழைக்கக் கூடியவர்களா யில்லை. அப்படி யிருந்தும், அவர்கள் விழுந்த இடத்திற்கு அரைமைல் தூரத்துக்கப்பால் கேசவன் மறுகரையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்தான். அவனுடம்பு சவம்போல் விறைத்துப் போயிருந்தது; அவனுக்குக் கொஞ்சம் கூடப் பிரக்ஞை கிடையாது. வெள்ளத்தால் பட்ட அவஸ்தையால் அவன் மிகவும் மயங்கிப் போயிருந்தான். ஆனல் அவனுடைய உயிர் நீங்கவில்லை. சிறிது சுவாசம் நாசியில் அசைந்தோடிக் கொண்டிருந்தது. மிக்க குளிரினலேயே அவனுக்கு இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. உடம்பிற் கொஞ்சம் உஷ்ணம்பட்டால் அந்த

விறைப்பும், மயக்கமும் நீங்கித் தெளிவுண்டாகும். ஆனால், அங்கே யார் அவனுடைய உடம்பில் உஷ்ணத்தை ஏற்று கிறவர்கள்? ஒருவருமில்லே.

அவன் அத்தகைய பரிதாப நிலேயுடன் கிடக்கும் போது தெய்வ கிருபையால், இராத்திரி நீங்கிச் சூரியோ தயமாயிற்று. சிறிது நேரத்திற்குள் ஆகாயம் களங்கமற் றிருந்தபடியால் காலேச் சூரிய வெப்பம் கேசவன் மேல் தாக்கிற்று. அது அதிகமாகத் தாக்கத் தாக்க அவன் தேகத்தில் உஷ்ணம் மிகுதியாகப் பரவிற்று. அந்த உஷ்ணத்தால் குளிர்ச்சியும் விறைப்பும் நீங்கி அவனுக் குத் தெளிவுண்டாயிற்று; சிறிசிறிதாக உலகஞாபகம் உண்டாயிற்று. அவன் சற்று தடுமாற்றத்தோடு எழுந்து உட்கார்ந்தான். ஆற்றேரமாக ஒரு அடர்ந்த காட்டிலிருக் கிறுன். அவன் ஆற்றில் வீழ்ந்தபோதே இறந்து விட்டோ மென்றே நினேத்தான். சிறிது நேரம் அவஸ்தை யடைந்த பின் அவனுக்கொன்றுமே தெரியாது. அந்நிலேமையை அடைந்த அவன் இப்போது உயிருடன் ஆற்றங்கரையி லிருப்பதைப்பற்றி அளவற்ற ஆச்சரியமடைந்தான்; இது தெய்வச் செயலென்றே நினேந்தான். உடனே தன் மகனு டைய ஞாபகம் அவனுக்குண்டாகி விட்டது. எப்பேர்ப் பட்டவர்களுக்கும் புத்ரதிவாஞ்சையுண்டாவது இயற்கை யன்றே? அவ்வாறு மகன் நினேவு வந்தவுடனே அவன், “அந்தோ! நம் மைந்தன் என்னகதியாயினனே; நம்மைப் போல் அவனும் பிழைத்திருப்பானு? ஏதேது ஒரு போதும் பிழைத்திருக்கமாட்டான்; நாம் தான் ஏதோ நல்ல காலத்தால் பிழைத்துக்கொண்டோம்; அவனும் அப்படிப் பிழைத்திருப்பானென்பதில் நம்பிக்கையில்லே. அவன் நிச்சயமாக இறந்தே யிருப்பான்; இந்த ஆபத் தான வெள்ளத்திலாவது அவன் பிழைக்கிறதாவது!

ஐயோ! நம் அருந்தவப் புதல்வன் அடியோடு போய்விட்டான்; அவனுடைய பிரிவு நமக்கு ஒரு கை போனது போலாயிற்று. எத்தனையோ ஆபத்துகளில் சிக்கி அவனும் நானும் தவறி வந்தும் கடைசியில் அவன் இந்த ஆற்று வெள்ளத்தில் மடியலானான். புத்திரியைப் பார்ப்பதற்கும் யான் யோக்கியதையற்றவனாய் விட்டேன்; மகனையும் இழந்துவிட்டேன்; திக்கற்றுத் திகைக்கின்றேன்; சொந்த நாட்டிற்கும் போகக் கூடாதவனாய் விட்டேன்; நடுக்காட்டிலிருக்கின்றேன்; இனி அண்டிப் பிழைக்கும் இடமெதுவும் அருகிலிருப்பதாகத் தெரியவில்லை; பசியோ தாங்கமுடியவில்லை; இளைப்போ அதிகமாயிருக்கின்றது: தேறுதல் சொல்வார் யாருமில்லை; எழுந்து நடக்கவும் சக்தியில்லை. கடவுள் நம்மைக் காப்பாற்றியும் இத்துன்பங்களை நீக்காமல் போயினார்; நாம் ஆதியில் செய்த அக்கிரமங்களாலேயே இப்போது இவ்வித பரிதாப நிலையை அடைந்திருக்கின்றோம்; இன்னும் என்னென்ன துன்பங்கள் நேரவிருக்கின்றனவோ; இனி அவற்றையெல்லாம் நினைப்பதில் பயனில்லை. நாம் இந்தக் காட்டைக் கடப்பதற்குள் பசியினாலோ மிருகத்தாலோ, வேறெதனாலோ இறந்து போவது நிச்சயம்; ஆயினும் மெதுவாக எழுந்து பையப்பைய இந்த ஆற்றினோரமாகவே நடந்து புத்திரனைத் தேடிப் பார்ப்போம்; அவன் உடம்பாவது அகப்பட்டால் அதைப் பார்த்து விட்டாவது மகனுடைய முகத்தில் விழித்தோமென்ற திருப்தியுடன் இறந்து விடலாம்; அப்படி அவன் தேகம் அகப்படாவிட்டாலும் ஏதேனுமொரு வகையால் மடிவோம்'' என்று கண் கலங்கியபடியே தள்ளாடியெழுந்து, உடைகளெல்லாம் ஈரமாயிருந்தபடியால் அவற்றைக் கழற்றி ஒவ்வொன்றாக வெயிலிற் காட்டி உலர்த்திக்கொண்டே அசைந்தசைந்து ஆற்

றின் கரையோரமாக நடந்து சென்றான். அவன் அதிகமாக இளைப்படைந்திருந்தபடியால் கொஞ்ச தூரம் செல்வதும், ஓரிடத்தில் சிறிதுநேரம் உட்கார்ந்து இளைப்பாறுவதும், மீண்டும் எழுந்து செல்வதுமாயிருந்தான்.

இப்படி அவன் மயக்கத்தோடு போய்க் கொண்டிருக்கும்போது, சிறிது தூரத்திற்கப்பால் ஆற்றின் கரையில் தண்ணீர் ஓரத்திலிருந்த மரத்தினடியில் வெள்ளையுடையொன்று ஒரு நீண்ட கட்டையில் சுற்றப்பட்டதுபோல் கிடந்தது. கேசவன், அதைக்கண்டதும், "இங்கே மனிதர் தரிக்கும் உடைகிடப்பதற்குக் காரணமென்ன?" என்று வியப்புடன் அதனருகே சென்று அதை நன்றாக உற்றுநோக்கினான். அவ்வாறு பார்த்வுடனே 'ஆ கடவுளே!' என்று கதறிக்கொண்டு அதன்மேல் வீழ்ந்தான். ஏனென்றால், அவன் மகன் சுப்பனே பிரக்ஞையற்றுத் தண்ணீரால் ஒதுக்கப்பட்டு அங்கே கிடந்தான். அவன் உடம்பின்மீதணிந்திருந்த உடைதான் கேசவனுக்கு அவ்வாறு தெரிந்தது. கேசவன் நெருங்கிப் பார்த்தபோது அவ்வுருவம் தன் மகனென்பதைத் தெரிந்துகொண்டான். அதனாலேயே அவன் இறந்து விட்டானென்று அவ்வாறு கதறிக்கொண்டு அவன்மேல் வீழ்ந்தான். அப்படி வீழ்ந்ததும் அவன், "ஐயோ! மகனே நீ இத்தகைய மனித சஞ்சாரமில்லாத விடத்தில் இறந்து பிணமாய்க் கிடக்கின்றாயே ; உனக்குச் சவச்சடங்கு செய்வதற்குக் கூட வேண்டிய சௌகரியங்கள் இவ்விடத்திலில்லையே; உன்னையிழந்து தனிப்பட்ட நான், இனி எவ்வாறுய்வேன்? என் செய்வேன்? எங்குச்செல்வேன்" என்று புலம்பினான். அவ்வாறு புலம்பிக்கொண்டே அவன் முகத்தை நன்றாக உற்றுநோக்கினான். ஆனால், அது, உயிருள்ள மனிதரின் முகம் போலிருந்ததேயன்றிச் சவக்குறியொன்றும் அதில்

காணப்படவில்லை. அந்தக் குறிப்பைப் பார்த்தவுடன் கேசவன், சந்தேகமுற்று அவன் நாசித் துவாரங்களில் விரலை வைத்துப் பார்த்தான். சிறிது சுவாச ஓட்டம் மந்தமாகப் புலப்பட்டது. உடனே கேசவன் முகத்தில் தைரியமான பிரகாசம் உண்டாயிற்று. அவன், "புத்திரனுக்கு உயிர் இருக்கிறது; அதிகக் குளிர்ச்சியால் உடம்பு விறைத்து ஆவிசோர்ந்திருக்கிறது; இது நமக்கேற்பட்டிருந்த நிலைமையே; நம்மீது இயற்கையாகவே சூரிய வெப்பம் தாக்கியபடியால் நாம் விரைவில் விறைப்பு நீங்கப் பெற்றோம்; இவன் நிழலிற் சேர்ந்திருந்ததனால் இவனுக்கது இல்லை; இன்னும் சற்றுநேரம் இப்படியே இருந்தால் இவன் இறந்தே போவான்; நல்ல காலத்தால் நாம் முந்தியே இவனைப் பார்த்துவிட்டோம்; விரைவில் இவனைச் சூரிய கிரணத்தில் காட்டினால் இவன் பிழைத்துக்கொள்வான்" என்று உடனே அவனைத் தூக்கிச் சூரியப்பிரகாசம் பரவியிருந்த இடத்தில் போட்டு ஈரமாயிருந்த அவன் உடைகளைக் களைந்து வெயிலிற் போட்டுவிட்டு உலர்த்தப்பட்டிருந்த தன்னுடையொன்றை அவன்மீது போட்டு ஈரத்தைத் துடைத்துச் சூடுண்டாக்கிக்கொண் டிருந்தான்.

சிறிதுநேரம் சூடுதாக்கவே சுப்பனுடைய உடம்பில் கொஞ்சம் இரத்த ஓட்டம் ஆரம்பித்தது. உடனே அவன் கண்ணைத் திறந்துபார்த்தான். தன் தகப்பன் எதிரிலிருப்பதைப் பார்த்தான். அவனுக்கு தைரியமும் தெளிவும் உண்டாயின. அவன் ஆவலுடன், "அப்பா! நீ இருக்கின்றாயா? எப்படிப் பிழைத்து வந்தாய்?" என்று எழுந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டான். அவனும், மகனைத் தழுவிக்கொண்டு முதுகைத் தடவினான். இருவரும் சந்தித்தபடியால் அவர்களுக்கு முன்னிருந்ததைக் காட்டினும் தைரியம் சற்று அதிகமாயிற்று. எனினும், அவர்கள்

உடம்பெல்லாம் வெள்ளத்தோடு கலந்துவந்த முட்செடிகளாற் கிழிக்கப்பட்டும், கற்களால் மோதப்பட்டதும் பற்பல காயங்களுண்டாய் இரத்த மொழுகிக் கொண்டிருந்தது. எங்கும் எரிச்சல் அதிகரித்திருந்தது. அப்பொழுது அவர்களுக்குத் தன்னறிவுண்டாய் விட்டபடியால் உடம்பில் உண்டாயிருக்கும் காயங்களாலேற்பட்ட வேதனை அதிகமாக உறுத்தத் தொடங்கிற்று. அதனால் அவர்கள் வேதனை சகிக்கமுடியாமல் வருந்தினார்கள். கொஞ்சம் சாராயமிருந்து பருகினால் அந்த உபத்திரவம் தெரியாமலிருக்குமென்று நினைத்தார்கள். அங்கே சாராய மேது? ஒயினேது? பசியை அடக்கிக்கொள்ளப் பிண்டத்திற்கே திண்டாட்டமா யிருக்கும்போது சாராயம் எங்கே அகப்படப் போகிறது? அவர்களுக்கு வேதனையைத் தணித்துக் கொள்ளவோ, பசியைத் தீர்த்துக்கொள்ளவோ ஒரு அனுகூலமு மேற்படவில்லை. அதனால் இருவரும் கண்கலங்கினார்கள்.

அப்போது சுப்பன் பேசத்தொடங்கி, "தந்தையே! நாம் ஆற்றில் வீழ்ந்தபோதே மடிந்தோ மென்றே நான் நினைத்தேன்; எனினும், இன்னும் கொஞ்சக் காலம்வரை நாம் உயிருடனிருந்து சீரழியவேண்டிய விதி யிருந்ததால் மீண்டும் பிழைத்திருக்கிறோம்; இப்போது உயிர் பெற்றெழுந்தும் உபத்திரவத்தையே அடையவேண்டிய நிலையிலிருக்கின்றோம்; இனி நாம் எங்கே செல்வது? எவ்வாறு பிழைப்பது?" என்று அடக்கமுடியாத வருத்தத்தோடு மொழிந்தான். கேசவன், "புத்திரனே! நாம் இப்போது பலபல யோசனைகளைச் செய்து வருந்திக்கொண் டிருப்பதில் எவ்விதபயனும் ஏற்படாது; விரைவில் இவ்விடத்தை விட்டுச் செல்ல வேண்டும்; ஏனென்றால், அந்தக் காட்டு

மிராண்டிகள் வசிக்குமிடம் சமீபத்திலேயே இருக்கக் கூடும்; ஒருசமயம் மீண்டும் நம்மைக் கண்டுகொண்டால் வாயில் போட்டு விழுங்கிவிடுவார்கள். ஆதலால், இவ் விடத்தைவிட்டுக் கொஞ்ச தூரத்திற்கப்பால் சென்று காட் டில் அகப்படும் சாப்பிடக்கூடிய வஸ்துக்களால் பசியாற் றிக்கொண்டு, அதன்மேல், காட்டு மிராண்டிகளல்லாத நல்ல மனிதர்கள் வசிக்கும் நாட்டைச் சேருதற்கு முயற்சி செய்யலாம்; இந்தப் பக்கங்களில் ஜனசஞ்சாரமுள்ள ஊர் தோற்றினாலும் அங்கே செல்லக்கூடாது; அவ்விடத்திலும் இத்தகைய நரமாமிச பக்ஷணிகளே இருக்கக்கூடும்; இனி மேல் அந்தப் பைசாசங்களிடத்தில் அகப்படாமல் வெகு ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும்'' என்று சொன்னான். சுப்பன், "ஆம்; ஆம்; அப்பா! அந்தப் பேய்களை நினைக்கும் போது வயிறு குழம்புகிறது; விரைவாகச் செல்ல வேண்டி யதுதான்; ஆனால் எங்குப் பார்த்தாலும் காடாகவே யிருக்கின்றது; திசையோ தெரியவில்லை; நாம் எந்தத் திக்கைப்பற்றிச் செல்கிறது?'' என்றான். கேசவன் "நாம் திக்கைப்பற்றி ஒன்றும் கவனிக்க வேண்டாம்; அந்தக் காட்டுஜாதி மனிதர் இருந்த ஊரோ நமக்குப் பின்புற மிருக்கிறது; ஆதலால், நாம் முன்னோக்கிச் செல்ல வேண் டும்'' என்று சொன்னான்.

அதன்மேல், இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டார்கள்; உடம்பில் பலமில்லாதபடியால் அவர்களால் நடக்க முடியவில்லை. கால்கள் தள்ளாடின; கண்கள் சுழன்றுகொண் டிருந்தன. அவ்வாறு நடக்க முடியா திருந்தும் அங்கே தங்கக்கூடாதென்னும் அச்சமானது அவர்களை முன்னே தள்ளியபடியால், அவர்கள் தடுமாறிக் கொண்டே மெதுவாக நடந்து சென்றார்கள். அப்படியே ஒருமைல் தூரம் சென்றபின், ஏதோ நல்ல காலத்தால்

ஒரு குளிர்ந்த சோலை எதிர்ப்பட்டது. அதில் சில மரங்களில் தின்னக்கூடிய காய்கள் நிறைந்திருந்தன. அவற்றைக் கண்டவுடன் அவர்கள், "இவை என்ன ருசியுள்ளவையா யிருந்தாலும் சரி; என்ன குணம் செய்தாலும் சரி; விஷமுடையவையா யிருந்தாலும் சரி; இவற்ருல் நாம் இறந்தாலும் சரி; இவற்றைப் பறித்துத் தின்போம்; 'பசிக்குப் பனங்காயைத் தின்ருல் பித்தம் போகிற பக்கம் போகட்டும்' என்ற பழமொழிக் கிணங்க, நாம் பசிக்கு இவற்றைத் தின்ருல் பின்னல் நடக்கிறது நடக்கட்டும்" என்று துணிந்து அவற்றைப் பறித்துத் தின்ருர்கள். ஆனல், அவைகள் ஒன்றும் கெடுதி செய்யக் கூடியவைக ளல்ல. கெடுதி யில்லாவிட்டாலும் அவற்றில் காரச்சுவையும் உப்பும் அதிகரித்திருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் பசிக்கொடுமையால் அவற்றை வயிறுநிறையத் தின்றுவிட்டார்கள். அவ்வாறு தின்றுவிட்டுக் கொஞ்சத்தூரம் நடப்பதற்குள் அந்தக்காய்களின் காரத்தால் அவர்களுக்கு வயிறு முதல் தொண்டை வரை ஒரே காந்தலெடுத்துக் கொண்டது. தாகமும் அதிகமாகி விட்டது. அதற்குள் நடுப்பகல் நேரமும் வந்துவிட்டதால் களைப்பு அதிகரித்து விட்டது. அதனல், அவர்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ள ஜலம் எங்கேனும் அகப்படுமா வென்று தேடினர்கள். எங்கும் ஜலம் அகப்படவில்லை. எப்படியாவது ஜலத்தைக் காணவேண்டு மென்னும் ஆவலால், முன்னேக்கி வேகமாக நடந்தார்கள். நெடுந்தூரத்திற் கப்பால் ஒரு கானறு குறுக்கே ஓடிக்கொண் டிருந்தது. அதில் செந்நிறமான ஜலம் சாந்தமாக ஓடிக்கொண் டிருந்தது. ஆனல், அது, அதிக அகலமில்லை; இருபதுகஜ அகலமே யிருக்கும்; அதன் இருகரையிலும் வளர்ந்த மரங்களின் கிளைகள் படர்ந்து, அந்த ஆற்றின்மேல் பச்சைப்பந்தலிட்

18628

டது போலிருக்கும். அந்த அமைப்பைப் பார்த்தவுடனே அவர்களுக்கு ஒருவகைத் திருப்தி யுண்டாயிற்று. ஏனெனில், அந்த மரங்களில் ஒன்றிலேறி, ஆற்றின் மேற்பாகத்தில் நீண்டு சென்றிருக்கும் ஒரு கிளையின் வழியாகப் போனால் ஆற்றின் மறுபக்கம் போய்விடலாம்.

ஆதலின், அவர்கள், "இந்த ஆற்றைச் சுலபமாகத் தாண்டிவிடலாம்" என்று சந்தோஷங் கொண்டு, அந்த ஆற்றின் தண்ணீர் ஓரமாக ஒன்றரைகஜ அகலத்திலும், மூன்று கஜ நீளத்திலும் அமைந்திருந்த கற்பாறை யொன்றின்மேல் நெருங்கி யுட்கார்ந்து ஜலத்தை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகினார்கள். அக் கற்பாறையானது மேற்பாகத்தில் மூன்றங்குல அகல நீளமுள்ள பாத்திகள் போன்ற பல பள்ளங்கள் அமைந்ததாயும், கரடுமுரடானதாகவும் இருந்தது. அதனால் அவர்களுக்கு அதன் விஷயத்தில் சந்தேக முண்டாயிற்று. 'இது கற்பாறைதானோ, வேறெதுவாக வேனு மிருக்குமோ' என்று அவர்கள் நினைத்தார்கள். பின்னர், 'இது, இந்தப் பக்கத்திலுள்ள ஒரு விநோதமான கல்' என்று மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள். அந்தோ! மனிதர்களின் எண்ணம் போல் எதுவும் நடக்குமா! சிறிது நேரத்திற்குள் அவர்களுடைய மனச்சமாதான மெல்லாம் அடியோடொழிந்து திடீரென ஒரு செய்கை யுண்டாகி விட்டது. அவர்கள் பாதித்தண்ணீர் குடித்தும் குடிக்காமலு மிருக்கும்போதே அந்த நெடும் பாறைக்கல் இருவரையும் தாங்கியபடியே, சரலென்று அம்புபோல் நழுவித்தண்ணீரின் நடுப்பாகத்திற்குப்போய் நீரோட்டத்தின் பக்கமாகவே மிதந்து கொண்டு சென்றது. அதனால் அவர்கள், அந்தக்கல், நழுவும்போதே கரையில் தாவிவிட முடியவில்லை. அப்பாறை முதலில் வேகங்கொண்டு தண்ணீரின் நடுப்பாதத்திற்கு

கழுவும்போது அவர்கள் கொஞ்சம் தடுமாறி நீரில் வீழப் போனார்கள். எனினும், முதல் நாளிரவு வெள்ளத்தால் அடைந்த அவஸ்தை மனதி லிருப்பதால் மிக்க பீதி யடைந்து விழாமல் ஜமாளித்து அந்தக் கற்பாறையைப் பற்றிக் கெட்டியாக அசையாமல் அதன்மேல் உட்கார்ந்து கொண்டார்கள். கற்பாறையானது தோணியைப் போல் மிதந்து சென்று கொண்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தினால் அவர்களுக் குண்டான அதி சயத்திற்களவில்லை. அஃதின்னதென்றே ஒன்றும் விளங்க வில்லை. "இஃதென்ன கல்லா? கட்டையா? வேறே உயிர்ப் பிராணியா? கல்லாயிருந்தால் இவ்வாறு மிதந்துசெல்ல மாட்டாதே; கட்டையா யிருந்தாலும் புரளுமே; ஐயோ! எதிற்புகுந்தாலும் நமக்குச் சங்கடமே முன்னிற்கின்றதே; இதனால் என்ன ஆபத்துவிளையுமோ! தண்ணீரில் குதித்து நீந்தி ஓடிவிடலாமென்றால் நீர் எவ்வளவு ஆழமிருக்குமோ, வேறென்ன தீங்கு நேரக்கூடுமோ என்று அச்சமாயிருக் கின்றதே" என்று பலவிதமான சந்தேகங்களால் மனக் கலக்க முற்றார்கள். இவ்வாறு சந்தேகத்துடனும் அச்சத் துடனும் செல்லும் போது அவர்களுக்குப் பெருந்திகி லுண்டாகும்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது; அதாவது, அவர்களைத் தாங்கிச்சென்ற அந்தக்கல்லின் ஒருபக்கமுனை யானது நீருக்குமேல் கொஞ்சம்தெரிந்து விட்டது. அதில், நாவான்போல வரிசையாக நீண்டபற்களும், பிளந்தவாயும் தெரிந்துவிட்டன. அவற்றைக் கண்டவுடன் சுப்பன் ஓ வென்று கதறி, "அப்பா! முதலை! முதலை! நம்மைக் கொண்டு போகிறது; சிறிது நேரத்திற்குள் நம்மை, அது தன்னிடத்திற்குக் கொண்டுபோய் வாலால் ஒரே அடியில் அடித்து வாயில்போட்டு மென்று தின்றுவிடப்போகிறது; நாம் சீக்கிரம் தப்ப வழிதேடவேண்டும்" என்று நடுங்கிக்

கொண்டு கூறினன். கேசவனும் அது முதலையென்று தெரிந்ததும் மனங்குழம்பி விட்டான்; எனினும், 'நாம் மரணபத்தில் சிக்கிக்கொண்டாலும் தைரியத்தை விடாமல், இதினின்றும் தவறுவதற்கு ஏதேனும் ஓர் உபாயத்தைக் கண்டு பிடிக்கவேண்டும்' என்று பரபரப்புடன் யோசித்துக்கொண் டிருந்தான். அந்த யோசனையுடன் சிறிது தூரம் செல்வதற்குள், ஆற்றின் குறுக்கே வளர்ந்த மரக் கிளையொன்று அவர்களின் கைக்கு எட்டக்கூடியதா யிருந்தது. அதைக் கண்டவுடன் கேசவன், "மகனே! இந்த மரக்கிளையைப் பிடித்து மேலே தாவிவிடு" என்று சொல்லிக்கொண்டே பந்துபோற் கிளம்பி அந்தக் கிளையைப் பிடித்து மூச்சடக்கி ஒரேபாய்ச்சலில் பாய்ந்து மேலேறிக் கொண்டான். சுப்பன் அவனிலும் வேகமுடையவனாதலின் அவனுக்கு முந்தியே மரத்திற்றாவி ஏறிக்கொண்டான்.

நண்பர்களே! இங்கே அவர்களைக் கொண்டு சென்றது முதலைதான். 'முதலை இவ்வாறு மனிதரைத் தாங்கிக் கொண்டு செல்லக்கூடுமோ?' என்று சிலர் சந்தேகிக்கக் கூடும். ஒரு விஷயத்தின் இயற்கைத் தன்மையை உணராதவர், அது தங்களுக்குத் தெரியாம லிருக்கும் காரணத்தைக்கொண்டு அது நடக்கக்கூடாதது என்று சொல்லி வாதமிட்டு, அதன் உண்மையை உணர்ந்தவர் உரைத்தாலும் ஒப்புக்கொள்ளாமல் மறுத்து அவர்களையும் பைத்தியக்காரர்களென்று பேசிவிடுவார்கள். உண்மை ஆராய்ச்சியுடையவர்களோ, இத்தகைய விஷயங்களை நேரில்பார்க்காவிடினும், கேள்விப்பட்டவுடன், தாங்கள் ஆராய்ந்தறிந்த வேறு விஷயங்களைக் கொண்டு அவை நடந்திருப்பதால் இவையும் நடந்திருக்கக்கூடும் என்று நம்பிக்கொள்வார்கள். இது உலக சுபாவத்தையும் மனிதர் இயற்கையையும் பொறுத்தது யிருக்கின்றது. ஆதலின், புத்திநுட்பமுடை

யவர்கள் இதை நம்புவார்கள்; மந்தபுத்தி யுடையவர்கள் தங்களுக்கேற்பட்ட சந்தேகத்தால் நம்பமாட்டார்கள். இத்தகைய மந்தமதியினர், எப்பொழுதுமே அரிய பெரிய விஷயங்களை ஆராய்ந்தறியும் ஆற்றலின்றி அறிவின்மை யென்னும் அந்தகாரத்திலேயே மூழ்கி ஞானமென்னும் பிரகாசந் தோற்றாமல் மங்கிக்கிடப்பார்.

முதலைகள், இவ்விதமாகக் கரை யோரங்களில் வந்து படுத்திருந்து, தமக்கு ஆகாரமாகும் பிராணிகளைத் தந்திர மாகக் கவர்ந்து செல்வது இயற்கை; மலாய் நாட்டில் சமுத்திரக்கரை யோரங்களிலும், சில ஆறுகளின் ஓரங்களி லும் குளிர்ந்த மரங்களிருக்குமாம். அந்த மரங்களில் அநே கம்குரங்குகள் விளையாடிக்கொண்டு திரியுமாம். அவற்றைத் தந்திரமாகப் பிடித்துண்ணும் பொருட்டுப் பெரிய பெரிய முதலைகள் அக்கரையோரங்களில் வந்து கற்பாறைகள் போல் தெரியும்படி முதுகுகளை மேலே தூக்கிக்கொண்டு அசையாமற் கிடக்குமாம். குரங்குகள் அவற்றைக் கற் பாறைகளென்றே நினைத்து அவற்றின்மேல் குதித்தும், சற்றுநேரம் தங்கியிருந்தும் விளையாடுமாம். அவைகள் அவ் வாறு விளையாடிச்சந்தேகமற்று இரண்டுமூன்றுசேர்ந்திருக் கும் வரை பொறுமையோடிருந்து அங்ஙனம்சேர்ந்தவுடன் அந்த முதலைகள் வாலைச் சுழற்றி அதனால் ஒரே அடியாக அடித்து அவற்றை வளைத்துப் பிடித்துக்கொண்டே நீருக் குள் மூழ்கித் தம்மிருப்பிடத்திற்குக் கொண்டு சென்று மென்று தின்றுவிடும்; அவற்றை முதுகில் தாங்கியபடியே வேகமாக நடுத்தண்ணீரில் பாய்ந்து அப்படியே கொஞ்ச தூரம் கொண்டு சென்று தங்களிருப்பிடத்திற்கு நேராகப் போனவுடன் வாலால் அடித்துக் கொன்று எடுத்துக் கொண்டு நீருக்குள் மூழ்கிவிடும். திடீரென்று நடுத்தண் ணீருக்கு நழுவிவிட்டால் அந்தக் குரங்குகள் நீரில் தாவித்

தப்பித்துக் கொண்டுபோக முடியாதென்று கருதியே அவை நிர்ச்சந்தேகமாக அவ்வாறு சுமந்துகொண்டு மிதந்தபடியே நடுத்தண்ணீரில் செல்லும். ஒரு சமயம் அக் குரங்குகள் தங்கள் முதுகைவிட்டு நீரில் தாவுவதாயிருந் தால் அவற்றை அம்முதலைகள் அப்பொழுதே அடித்துக் கொன்றுவிடும். இப்படியே ஒரு பிராணி மற்றொரு பிராணியைப் பிடிப்பதற்குப் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்வது இயற்கை. இதனை அநேகம் அறிஞர்கள் நேரில் கண்டிருப்பார்கள். அறிவற்ற மூடர்கள் இத்தகை அரிய செயல்களை நேரில் பார்த்தாலும் அவற்றிலுள்ள நுட் பத்தை ஆராயாமல் அஃதென்னமோ வென்று மேற்போக் காகக் கவனிக்காமல் போய்விடுவதோடு உண்மை கண்ட உத்தமர் பேச்சுக்களையும் நிராகரித்து ஒதுக்கித் தள்ளி விடுவர்.

முதலையினங்களுக்கு இவ்வகைத் தந்திரமிருப்பதனால் தான் மேற்கூறியபடி அந்த முதலையும் கேசவனையும், சுப் பனையும் கொண்டு சென்றது. தெய்வ கிருபையால் உடனே அடித்துக் கொன்றுவிடாமல் அவர்களை உயிருடன், நல்ல ஆகாரம் கிடைத்ததென்னும் உற்சாகத்தால் தாங்கிச் சென்றதனால் அவர்கள், அதன் சூழ்ச்சியை உணர்ந்து விரைவில் தப்பித்துக்கொண்டார்கள்,

அவர்கள் அங்ஙனம் மரத்திற் பாய்ந்தேறிக்கொண்ட வுடன், ஏமாந்துபோன அம்முதலை, கிடைத்த ஆகாரம் தவறிவிட்டதே என்னும் கோபத்தால் வாலைக்கொண்டு நீரைப்பன்முறை அடித்துக் கலக்கிவிட்டு மிக்க மனவருத் தத்துடன் தண்ணீருக்குள் மூழ்கிப் போய்விட்டது. கேச வனும் சுப்பனும் மரத்திலிருந்தபடியே அதன் ஆர்ப்பாட் டத்தைப் பார்த்தவுடன், "ஐயோ! இதன் வாயில் அகப்

பட்டால் நாம் என்னபாடு படுவோம்!" என்று மனந் திடுக்கிட்டு, மெதுவாக அந்த மரக்கிளையின் வழியாக அந்த ஆற்றைக்கடந்து மறுகரையில் இறங்கினார்கள்.

---

## 42—வது அத்தியாயம்.

அவ்வாறு இறங்கியவுடன், சுப்பன் மிக்க மனச் சோர்வோடு கேசவனை நோக்கி, "அப்பா! நாம் எந்த வழியிற் போனாலும், என்ன செய்தாலும் நமக்கு ஆபத்தே முன்வந்து நிற்கின்றது; நாம் ஏதேனுமொன்றால் இறந்துவிட்டாலும் தொல்லை அடியோடொழிந்து போகும்; அப்படிச் சாவும் நேரவில்லை; ஒவ்வொன்றிலும் நாம் தப்பிவிடுகிறோம்; ஆனாலும் ஒன்றின்மேலொன்றாக வரும் ஆபத்துக்களை நினைக்குந்தோறும் ஈரல் கருகிப் போகின்றது; இனிமேலும் என்னென்ன வரப்போகின்றனவோ! நாம் மனச்சாந்தியுடனிருப்பதற்கு இதுவரையிலும் நமக்குப் புகலிடம் ஒன்றும் ஏற்படவில்லை; ஏற்படப் போவதாகவும் தெரியவில்லை; நாம் இப்படியிருந்து என்னதான் செய்கிறது" என்று கண்கலங்கி யழுதான்.

கேசவனுக்கும் அச்சமையம் மன வேதனை அதிகமாகவே யிருந்தது. எனினும், அவன் அதனை அடக்கிக் கொண்டு சுப்பனை நோக்கி, "புத்திரனே! நாமோ அளவிறந்த துன்பங்களில் மூழ்கி வந்திருக்கின்றோம்; இனி, இவற்றிற்கு மேற்பட்ட ஒரு துன்பம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. 'நிறையக் குளித்தவனுக்குக் குளிரில்லை' என்றபடி நாம் எண்ணிறந்த வேதனைகளை அடைந்தடைந்து மனம் மதர்த்துப் போய்விட்டபடியால் இனி என்ன துன்பம் நேர்ந்தபோதிலும் அதற்காக நம்மனம் அதிகமாய்க் கலங்கமாட்டாது; ஆதலால் வரும் இடர்

களைச் சகித்துக்கொண்டே செல்வோம்; இதுவரையிலும் நம்மைக் காப்பாற்றிய கடவுள் முற்றிலும் காப்பாற்றுவார்; இப்பொழுதோ பகல் பதினைந்து நாழிகைக்கு மேலாகிவிட்டது; சூரியன் அஸ்தமிக்குமுன் இராத்தங்குவதற்கு அபாயமற்ற ஒரு நல்லிடத்தை யணுகவேண்டும்; நல்ல மனிதர்களுடைய சஞ்சாரமாகிய இடம் நமக்குப் புலப்படும் வரையில் நாம் இந்தப் பக்கங்களிலுள்ள காட்டு மிராண்டிகளின் ஊர்களின் பக்கம் நெருங்கவே கூடாது; காட்டின் மார்க்கமாகவே நடந்து செல்ல வேண்டும்; இந்த ஆற்றோரமாகவே சென்றால் இது ஒரு சமுத்திரத்தின் ஓரத்திலாவது நகரத்தின் ஓரத்திலாவது கொண்டுபோய்ச் சேர்க்கும்; என்றாலும் இடையில் இரவுவந்து இந்த ஆற்றினோரம் தங்கினேமோ இதிலுள்ள பிரமாண்டமான முதலைகள் வந்து நம்மைக் கொன்றுவிடும்; ஆதலால் இந்த அபாயகரமான ஆற்றின் சார்பைவிட்டு நாம் நெடுந்தூரம் போய்விட வேண்டும்" என்றான். சுப்பனும், "துணிந்தவருக்குத் துக்கமில்லை" என்று எழுந்து நடந்தான்.

இருவரும் சற்று விரைவாகவே நடந்து வடதிசையில் பத்துமைல் தூரம் சென்றார்கள். இடையில் மிருகங்களின் ஆரவாரத்தாலும், முட்கள் தேகத்தில் கீறியதாலும், பல துன்பங்களை யடைந்தார்கள். பிற்பகல் சூரியன் அஸ்தமிப்பதற்கு நாலைந்து நாழிகை யிருக்கும்போது ஒரு சிறு மலையடிவாரத்தில் மரங்களடர்ந்த ஓரிடத்தைச் சேர்ந்தார்கள். அங்கே குளிர்ந்த ஜலத்தையுடைய சிறிய அருவியொன்று மலையினின்றும் இழிந்தோடிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் பேரிக்காய் மரங்கள் அடர்ந்திருந்தன. அவற்றில் காய்கள் நிறைந்திருந்தன. அவற்றைக் கண்டவுடன் அவ்விருவருக்கும் தேவாமிர்தம் கையில் கிடைத்ததுபோல் மிகுந்த சந்தோஷ முண்டாயிற்று. உடனே

இருவரும் இருபது முப்பது பேரிக்காய்களைப் பறித்துக் கொண்டு வந்து அந்த அருவிஜலத்தின் ஓரத்தில் உட்கார்ந்து அவற்றை வயிறுநிறையத்தின்று அருவிஜலத்தையும் பருகினார்கள். இரண்டு தினங்களாக ரொட்டியாவது சாராயமாவது வேறு ஆகாரங்களாவது அகப்படாமல் வருந்தியிருந்த அவர்களுக்கு அந்தப் பேரிக்காய் அகப்பட்டது எவ்வளவோ திருப்தியாயிருந்தது. பசியடங்கி இளைப்பும் நீங்கிற்று. அதனால் கொஞ்சம் தூக்கம்வர ஆரம்பித்தது. சுப்பன் இரண்டு மூன்று முறை தூங்கிவிழுந்தான். அதைக் கண்டவுடனே கேசவன் திடுக்கிட்டு, "மகனே! தூங்கிவிழாதே; இது மிக்க அபாயகரமானவிடம்; மலையடிவாரமா யிருக்கின்றது; இராத்திரிக்கு துஷ்ட மிருகங்கள் மலைமீதிருந்து இறங்கிவரக் கூடும்; ஆதலின், இருட்டாவதற்குள் வேறே ஒரு நல்ல இடம் பார்த்துத் தங்கவேண்டும்" என்றான். சுப்பன், "அப்பா! எங்கே பார்த்தாலும் இருள் சூழ்ந்த காடாகவே யிருக்கின்றது; இதில் நமக்கு அபாயமற்ற இடம் எங்கே அகப்படப் போகின்றது; மற்ற இடங்களைக் காட்டினும் இதுவே நல்ல இடமாக எனக்குத் தோற்றுகின்றது; இவ்விடத்தில் அருவிநீர் ஓடிக்கொண் டிருப்பதாலும், இளமரச்சோலை யிருப்பதாலும், ஆகாரத்திற் குபயோகமாகிய பேரிக்காய்கள் அகப்படுவதாலும் இது தங்குவதற்குச் சௌக்கியமா யிருக்கும்: மேலும் இந்தப் பேரிக்காய்கள் சேதப்படாம லிருப்பதால் இங்கே துஷ்டமிருகங்களின் சஞ்சாரமில்லை யென்பதும் தெரிகின்றது. ஆதலால் இராப்பொழுதை இங்கேயே கழிக்கலாமென்று நினைக்கிறேன்" என்றான்.

கேசவன் சிறிதுநேரம் யோசித்து, "சரி; அப்படியே இங்குத்தங்கலாம்: எனினும் இவ்விடத்திலும் கூட ஒரு பாதுகாப்பான இடத்திலேயே தங்கவேண்டும்" என்று

சொல்லிவிட்டு அதற்குத் தகுதியானவிடம் இருக்கின்றதா வென்று நான்குபக்கங்களிலும் சுற்றிப்பார்த்தான். அங்கே அந்த அருவிநீர் ஓட்டத்தின் மத்தியில் ஓர் அகன்ற கற்பாறை யிருந்தது. அது, சுற்றிலும் நீர் அகழியால் சூழப்பட்ட ஒரு மேடைபோன் றிருந்தது. அதற்குப் போவதற்கு இடையிலுள்ள ஜலமானது அதிக ஆழமாயிருக்குமோ என்று கேசவன் இறங்கி அந்தப் பாறைவரையிலும் போய்ப்பார்த்தான். நீர் தொடையளவே யிருந்தது. உடனே கேசவன் திரும்பிவந்து சுப்பனுக்கு அந்தப் பாறையைக்காட்டி, "இந்தப்பாறை நாம் இரவில் தங்குவதற்குத் தகுதியானவிடம்; சுற்றிலும் நீர் சூழ்ந்திருப்பதால் எந்தப் பிராணியும்வந்து வருத்துதற் கேதுவில்லை; ஆதலால், அவ்விடத்திலேயே தங்கலாம்; இரவுவரும் வரையில் இந்த இடத்திலேயே படுத்துக் கொஞ்சம் காற்றுவாங்கிக் கொண் டிருக்கலாம்" என்றான். அவ்வாறே இருவரும் இருந்த விடத்திலேயே மணலில் சாய்ந்து, தங்களுடைய இறந்தகால நிலைமைகளையும், நிகழ்கால நிலைமைகளையும், எதிர்கால நிலைமைகளையும் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

சிறிது நேரத்திற்குள் சூரியன் அஸ்தமித்து மங்கலான இருள்பரவிற்று. அப்போது கேசவன் மகனை நோக்கி, "இனி நாம் அந்தக் கற்பாறைக்குப் போய்விடவேண்டும்; இன்னும் சில பேரிக்காய்களைத் தின்றுவிட்டு அங்கே போய்விடலாம்" என்றான். அவ்வாறே இருவரும் சில காய்களைத்தின்றார்கள். பின்னர் எழுந்து அந்தப்பாறைக்குச் செல்வதற்கு அருவி ஜலத்தை நோக்கி நடந்தார்கள். அந்தோ! மனிதன் எண்ணப்படி எதுவுமே நடப்பதில்லை. இவர்கள், இரவில் தங்குவதற்குத் தங்களுக்குத்தகுதியான இடங்கிடைத்ததைப் பற்றித் தைரியமும் சந்தோஷமும்

அடைந்தும் அவையெல்லாம் அடியோடு தொலைந்துவிடும் படியான சங்கடம் உடனே நேர்ந்துவிட்டது. இவர்கள் இரண்டடி எடுத்துவைத்தது தான் தாமதம்; இவர்களுக்குப்பின்னுல் யாரோ இருவர்வந்து இவர்களுடைய கழுத்தைப்பிடித்து இறுக்குவது போன்றிருந்தது. "அடே சுப்பா! ஏதோ மோசம் வந்துவிட்டது!" என்று இருவரும் கதறிக்கொண்டு பின்பக்கம் திரும்பிப்பார்க்க முயன்ருர்கள். பின்னேவந்து இவர்கள் கழுத்தைப் பிடித்திருந்தவர்கள் இவர்களைத் திரும்பவிடவில்லை; அதனுல், அவ்வாறு பற்றியிருப்பவர்கள் யாரென்று இவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள், "ஐயோ! நம்முடைய ஜன்மந்தான் என்ன ஜன்மமோ! கொஞ்சநேரத்திற்கு முன்புதான் நாம் பெரிய ஆபத்திலிருந்து நீங்கினேம்; அதற்குள் வேறெரு விபத்து நேர்ந்துவிட்டது. அடடா! கழுத்து நெரிகிறதே; நம் கழுத்தைப்பற்றியிருப்பவைகள் என்ன? மனிதரா? இராக்ஷதரா? பூதமா? பிசாசா? காட்டுமனிதனு? காட்டுக்குரங்கா? ஒன்றுந் தெரியவில்லையே! இவற்ருல் என்ன தீங்குநேருமோ? நம் உயிரே போய்விடுமோ? அந்தோ! நாம் ஏன்தான் அந்த ஜயிலைவிட்டு ஓடிவந்தோம். பூமியே! நீ வெடித்து எங்களை விழுங்கிவிட மாட்டாயா? நாங்கள் எத்தனை நாளைக்குத்தான் இத்துன்பங்களை யடைவோம்" என்று கதறினுர்கள். என்னகதறியும் அவர்கள் விடவேயில்லை. இவர்களை அவை, அந்த அருவிநீர் ஓரத்தைவிட்டுக் காட்டின்பக்கம் செல்லுமாறு கழுத்தைப் பிடித்தபடியே திருப்பினுர்கள். இவர்கள் அந்தப்பக்கம் செல்லப்பயந்து இஷ்டமில்லாமல் நின்ருர்கள். இவர்கள், அவர்களின் நோக்கத்திற்கு மாருக நடக்கவே, அவர்கள், தாங்கள் நினைத்த திக்கிற் செல்லும் படி ஜாடைகாட்டி கையை மடித்துக்கொண்டு இவர்களின்

கன்னத்தில் ஓங்கி நாலைந்து குத்துவிட்டார்கள். அந்தோ! அந்தக்குத்தினால் இவர்களுடைய கன்னமே நொறுங்கி விட்டதுபோ லிருந்தது. "ஐயோ! இது என்னவேதனை யடா அப்பா!" என்று இவர்கள் ஆவென்று வாயைத் திறந்து முகத்தைச் சுளித்தார்கள். மேலும்மேலும் அவர்கள் கன்னத்திலும் தலையிலும் குத்திவருத்தினார்கள். அதனால் இவர்கள், "சரி! சரி!! இவர்கள் நம்மை இந்தக்காட்டின்பக்கம் செல்லச்சொல்லியே குத்துகிறார்கள்; அவர்கள் நோக்கம்போல் நாம் செல்லாவிடில், இவர்கள் நம்மை வதைத்து விடுவார்கள்" என்று அவர்களுடைய நோக்கத்தைத் தெரிந்து கொண்டு, "ஐயோ! இவர்கள் நம்மை எங்கே கொண்டு போகின்றார்களோ!" என்று திகிற்பட்டுக் கொண்டு அவர்கள் ஜாடையாகக் காட்டின திக்கே சென்றார்கள்.

அவ்வாறு சிறிதுதூரம் போய் மரங்களும் செடிகளும் அடர்ந்த காட்டிற்குள் நுழைந்தவுடன், கேசவனுக்கும், சுப்பனுக்கும் மேலும் திகிலும், சிரமமும் அதிகரிக்கும் படி, அவர்களுடைய கழுத்தைப் பிடித்திருந்தவர்கள், அவ்வாறு பிடித்தபடியே பந்துபோல் மேலே கிளம்பி, அவர்களின் பிடரியில் உட்கார்ந்து, கால்களைக் கழுத்தின் இரண்டு பக்கத்திலும் முன்பக்கம் மார்புக்கு நேராகத் தொங்கவிட்டு அக் கால்களால் கழுத்தைப் பின்னிக் கொண்டு, தலையைக் கையாற் பற்றிக்கொண்டு குதிரை மேலேறிச் சவாரி செய்வதுபோற் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனோடு வேகமாக நடந்து செல்லும்படி கன்னத்தில் அடிக்கடி குத்தி இவர்களை வருத்திக்கொண்டு மிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவருடைய பாரமும் ஒரு பெரிய கனத்த ஆளின் பளுவு எவ்வளவிருக்குமோ அவ்வளவிருந்தது. அந்தப் பாரத்தினால் இவ்விருவரும்

பெரு மூச்சுவிட்டுத் திணறிப்போனார்கள். பாரம் ஒரு பக்கம், அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு நடப்பது ஒரு பக்கம், தலையில், கை முஷ்டியால் குத்துவிழுவது ஒரு பக்கம் இவர்களுக்கு அளவற்ற வேதனையைச் செய்து கொண்டிருந்தன. அந்த வேதனையால் மிக்க வருத்தத்தோடு இவர்கள் வேகமாக நடந்து சென்றுகொண் டிருந்தார்கள்.

அப்படிச் செல்லும்போதே, தங்கள் பிடரிமேலிருந்து கழுத்தைச் சுற்றிக்கொண்டு மார்பின் பக்கமாகத் தொங்கும் அந்த ஆசாமிகளுடைய கால்களைப் பார்த்தார்கள்; பாதங்கள், மனிதரின் அடிகளைப் போலவே யிருந்தன. ஆனால், அக்கால்களில் தொடை வரையினும் நீண்டு கருமையா யிருக்கும் உரோமங்கள் நிறைந்திருந்தன. தோல் நிறம் மிகக் கருமையா யிருந்தது. இவற்றைப் பார்த்தவுடனே கேசவனும், சுப்பனும் "இத் தோற்றங்களைப் பார்த்தால் மனிதர் ரூபங்களாகத் தெரியவில்லையே" என்று சந்தேகமுற்றுத் தங்கள் தலைக்குமேல் நிமிர்ந்து பார்த்தார்கள். அப்போது அதிக இருள் பரவாதிருந்தபடியால் தங்களைச் சவாரி செய்கின்றவர்களுடைய முகங்கள் நன்ருய்த் தெரிந்துவிட்டன. ஐயோ! இருவர்பாடும் விலவிலத்துப் போய்விட்டது. அப்பொழுதே கேசவனுக்கும், சுப்பனுக்கும் உயிர் போய்விட்டதுபோ லிருந்தது; இருதயம் வெடிப்பதுபோலிருந்தது; உடம்பெல்லம் நடுக்கமெடுத்துக் கொண்டது. நாவறண்டு போயிற்று; கால்கள் ஓய்ந்து போயின; பலம் கொண்டு நடக்க முடியவில்லை. ஏனென்ருல் அவர்களுடைய தலைக்குமேல், இரண்டு ஆப்பிரிக்கா தேசத்துப் பெரிய காட்டுக் குரங்குகளிருக்கின்றன. அவைகள் மனிதர்களைப்போல வந்து அவர்களைப் பிடித்து மேலேறிக் கொண்டன. அவைகளை அவர்கள்,

முன்னே மனிதர்களென்று கருதி யிருந்தார்கள். இப்பொழுதுதான் குரங்குகளென்று தெரிந்து கொண்டார்கள். அந்தக் குரங்குகள் காய்கனி கிழங்கு முதலியவைகளைத்தான் உண்ணக்கூடியவைகள்; மனிதர்களைக் கொல்வதில்லை. ஆனால் அவர்களைக் கண்டால் விடுவதில்லை. அவர்கள் மேலேறிச் சவாரி செய்தும், அவர்களால் பல வேடிக்கைகளைச் செய்வித்தும், அவர்களை அங்குமிங்கும் பற்பலவிடங்கட்குச் செலுத்தி வருத்திப் பலவிதமான வேடிக்கைகளைச் செய்வது அவற்றிற்கு வழக்கம். அவைகள், அவ்வாறு வேடிக்கைகள் செய்தாலும் மனிதர்க்கு அச்செய்கைகள் பெருந் துன்பமாகவே யிருக்கும். அவற்றைப் பார்த்தால் மிகுந்த பயங்கரமாகவே யிருக்கும். அவற்றின் கையினின்றும் தப்புவது மாத்திரம் கஷ்டம்; அவைகளிடம் அகப்பட்டுத் தப்பியோட முடியாமலிருப்பவர் இவ்வகைக் கஷ்டங்களால் மடிந்து போவது முண்டு. ஆனால், குரங்குகள், இவ்வாறு மனிதர்மீதோ வேறு பிராணிகளின்மீதோ ஏறிச் சவாரிசெய்து விளையாடுவது நடக்காத காரிய மன்று; இந்நாட்டிலேயே குரங்குகள் மிகுந்து சஞ்சரிக்கு மிடங்களில் ஊர்ப்பன்றிகளின்மீது ஏறி யுட்கார்ந்து ஒய்யாரமாகச் சவாரி செய்வதைப் பார்க்கலாம்.

மேற்கூறிய காட்டுக் குரங்குகளைத் தூரத்தில் பார்த்தாலே மனிதர் நடுங்கிப் போவார்கள்; அப்படியிருக்க அவை தங்கள்மீதே ஏறி யிருப்பதைப் பார்த்தபோது கேசவனுக்கும் சுப்பனுக்கும் எவ்விதமான பயமுண்டாகி யிருக்குமென்பதை, இக்கதையை வாசிக்கும் நண்பர்களே உணர்ந்து கொள்ளலாம். அவர்கள் அவ்வாறு அவற்றைக் கண்டு நடுங்கியவுடன், "அட கடவுளே! இதென்ன சனியன்! பெரிய எமன்களிடம் அகப்பட்டுக் கொண்டோமே;

இந்த ஆப்பிரிக்கா தேசத்துப் பெரிய குரங்குகளைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கின்றோம்; இவை தங்களிடம் சிக்கிய மனிதரைக் கசக்கிவிடக் கூடியவைகளல்லவா! இனி இவற்றின் கையினின்றும் நாம் எப்படித் தப்பப் போகின்றோம்; இவற்றால் என்ன துன்பம் நேருமோ தெரியவில்லையே'' என்று தள்ளாடிக்கொண்டு சென்றார்கள். இரவு அதிகமாக அதிகமாக அவர்களுக்கு வழியும் தெரியவில்லை, செடியும் தெரியவில்லை. ஐயோ! கல்லிலும் முள்ளிலும், மேட்டிலும், பள்ளத்திலும், மரத்திலும் செடியிலும் மூக்கு போனவழிக்கு நேரே அவர்களை வருத்தி நடத்திச் சென்றன. அவர்கள் அன்றிரவு பட்டபாடு கடவுள் ஒருவனுக்கே தெரியும். காலெல்லாம் முட்கள் நிறைந்துவிட்டன; மேற் சட்டைகளெல்லாம் செடிகளாலும், மரக்கிளைகளாலும் பற்றி யிர்க்கப்பட்டுக் கிழிந்துவிட்டன. களைப்போ அதிகம்; அந்தக் கற்பாறையில் போய் நிர்ப்பயமாய்ப் படுத்துறங்கலா மென நினைத்த இவர்களுக்கு ஓரிடத்தில் உட்காரவும் முடியவில்லை. இவர்கள் இளைப்பால் கொஞ்சம் நின்றார்களோ எட்டுப் பத்துக் குத்துகள் ஒன்றின்மே லொன்றாகத் தலையில் வீழ்கின்றன. அதனால் அவர்கள் இரவெல்லாம் அந்தக் குரங்குகளைச் சுமந்துகொண்டே அவை செலுத்திய விடங்களெல்லாம் நடந்துகொண்டே திரிந்தார்கள். அவைகள் எந்த விஷயத்திற்கும் அவர்களை விட்டுக் கீழே யிறங்குவதாகத் தெரியவில்லை. ஆகார முண்ணும் வேலையைக்கூட அவர்கள் பிடரியிலிருந்தபடியே காய்கனிகளைப் பறித்துத் தின்று முடித்துக் கொள்கின்றன. அதனால், அவைகள் தங்களை விட்டு இறங்குமென்னும் விஷயத்தில் நம்பிக்கையேயில்லை. அவைகளுக்கு எப்பொழுது உற்சாகம் குறையுமோ,

அவை எப்போது தம்பிடரியை விட்டிறங்குமோ என்பது அவர்களுக்குத் தெரியாது. தங்களுடைய நிலைமை எதிர் காலத்தில் என்னவாகு மென்பதையும் அவர்களால் உணர்ந்து கொள்ளக் கூடவில்லை.

இத்தகைய விஷயங்களால் ஏற்பட்ட பலவகைச் சந்தேகங்களினாலே அவர்கள் கண்கலக்கப்படும் சமயத்தில், சுப்பன் கண்ணீர் வடித்துக்கொண்டு "தந்தையே! இஃதென்ன உயிரோடு நமக்கு நரகவாதனை பேற்பட்டு விட்டதே; பெரிய வில்லங்கத்தில் நாம் சிக்கிக்கொண்டோமே; இனி, நம்முடைய முடிவுதான் என்ன?" என்று கேசவனிடம் கேட்டான். அவன், "சுப்பா! இவை மிக்க உபத்திரவம் செய்யக்கூடிய குரங்குகள்; சவாரிசெய்யும் உற்சாகம் தீருமட்டும் நம்மை விடமாட்டா; நம்மைக் கொல்லுந் தன்மை இவைகளிடத்தி லில்லை; என்றாலும், இவைகள் இரண்டு தினங்கள் வரையிலும் நம்மைவிடாம லிருந்தால் நாம் பசியாலும், இளைப்பாலும் இறந்தேபோவோம்; ஆதலால் இவைகளாக நம்மை விடுமட்டும் நாம் பொறுத்திருக்கமுடியாது; நாமே இவற்றின் பிடியினின்றும் நீங்குவதற்கு ஏதேனுமோ ருபாயந் தேடவேண்டும்; விடிந்தால் ஏதேனும் ஏற்படும்; நீ என்னவந்தாலும் அஞ்சாமலிரு; கடவுள் அனுக்கிரக மிருந்தால் நாம் பிழைத்துக்கொள்வோம்" என்று சமாதானம் கூறினன்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டே அந்தக் குரங்குகள் செலுத்தியவழியே கொஞ்சதூரம் நடந்து போனார்கள். அந்தச் சமயத்தில் இரவு நீங்கி விடியற்காலமாயிற்று. சூரிய வெளிச்சம் எங்கும் பரவிற்று. அப்படி வெளிச்சமானவுடனே, அவர்கள் இரவெல்லாம் கண்விழித்து வழி நடந்த இளைப்பால், எதிரில் கொஞ்சம் நீரும் சேறுமாயிருந்த ஒரு பள்ளத்தில் தடுமாறி வீழ்ந்தார்கள். அப்

பொழுதும் அந்தக் குரங்குகள் அவர்களை விடவில்லை. அத்தருணத்தில் அவர்கள் வீழ்ந்த அதிர்ச்சியால் அந்தப் பள்ளத்தில் நாலைந்து பெரிய நீர்ப்பாம்புகள் இருந்து வெளியேறி ஓடின. அவற்றைக் கண்டவுனே அந்தக் குரங்குகள், அவர்களை விட்டுப் பளீரென்று தாவி ஒரு பக்கத்தில் ஓட்டம் பிடித்தன. அவர்கள், அந்தக் குரங்குகள் நீர்ப்பாம்புகளுக்குப் பயந்தே ஓடுகின்றனவென்பதைத் தெரிந்துகொண்டார்கள். குரங்குகள் பாம்புகளைக் கண்டால் மிகுதியும் பயந்தோடுமென்பதும், நீர்ப்பாம்புகள் மனிதரைக் கடிக்கமாட்டாவென்பதும் அவர்களுக்குத் தெரியுமாதலால், அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பாம்புகளை வாலிற் பிடித்துத் தூக்கிக்கொண்டு வேகமாயோடி அந்தக் குரங்குகளை நெருங்கி அவற்றின் முதுகில் எறிந்தார்கள். இரண்டு மூன்று பாம்புகள் அவற்றின் முதுகிற் பட்டுக் கீழே வீழ்ந்தன. பாம்புகள் முதுகின் மேற்பட்டதுதான் தாமதம்; அந்தக் காட்டுக் குரங்குகள் மிகுதியும் பயங்கொண்டு, கீச்சுக் கீச்சென்று கத்திக்கொண்டு அம்பினுங் கடியவேகங்கொண்டு திரும்பிப் பாராமல் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்துவிட்டன. அவைகள் அவ்வாறு பயந்தோடுவதைப் பார்த்தவுடனே கேசவனுக்கும், சுப்பனுக்கும் ஏற்பட்டிருந்த வருத்தங்களெல்லாம் எங்கோ பறந்தோடி விட்டன. அவர்களுக்கு அடக்க முடியாத சிரிப்புண்டாகிவிட்டது. அதனால் அவர்கள் கீழே வீழ்ந்து வீழ்ந்து சிரித்தார்கள்.

அதன்மேல் சுப்பன், தந்தையை நோக்கி, "அப்பா! இப்பேர்ப்பட்ட பயந்த குரங்குகள் தாமே நம்மை இரவெல்லாம் துன்பப்படுத்திவிட்டன. இப்பொழுதவைகள் ஒரு சிறிய பிராணிக்கு பயந்தோடுகின்றனவே!" என்று வியப்பாகக் கூறினான். அதற்குக் கேசவன், "மகனே!

உலகத்தில் எத்தகைய வல்லமைசாலிகளும் ஒரு அற்ப னிடத்திலும் அடங்கி விடுவார்கள்; கடவுள், இப்படியே ஒவ்வொருவருடைய கர்வமும் அடங்கும் மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கின்ருன்; இந்த உண்மையை அறியாத மூடர்கள் தாம் வீணே கர்வங்கொண்டலைவார்கள்" என்று சொல்லி விட்டு, "சரி; இனிமேல் நாம் இத்தகைய ஆபத்துக்களில் அகப்பட்டுக்கொள்ளாமல் வெகு ஜாக்கிரதையாகச்சென்று, நல்ல மனிதர்கள் சஞ்சரிக்குமிடத்தை யணுகவேண்டும்; இந்தப் பிரதேசங்களெல்லாம் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பெருங்காடுகள் மலிந்தவிடம்; இந்தப் பக்கங்களிலுள்ள காடுகளில் மகா துஷ்ட மிருகங்கள் வசிக்குமென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்; ஆதலால் நாம் விரைவில் இந்தக் காட்டுப் பிரதேசத்தைக் கடந்து விடவேண்டும்; இனியும் நாம் ஆபத்துகளில் சிக்கிஞல் சகிக்கமுடியாது; நாம் இதுவரை பட்டபாடு போதும்! போதும்!!" என்று சொன்ஞன். சுப்பனும் 'ஆம்; விரைந்து செல்லவேண்டும்' என்ருன். பின்னர் இருவரும், அந்தப் பெரிய குரங்குகள் சஞ்சரிக்கும் அந்தக் காட்டின் எல்லையைச் சிக்கிரம் கடந்துசென்று விடவேண்டும் என்னும் எண்ணத்தால் வடதிசை நோக்கி மிக்க விரைவாகச் சென்ருர்கள்.

---

## 43—வது அத்தியாயம்

அங்ஙனம் சென்ற அவ்விருவரும் நெடுந்தூரம் நடந்து காலை பத்துமணிக்குமேல் காட்டின் எல்லையைக் கடந்தார்கள். அதற்கப்பால் எங்கும் சமவெளியாயிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவர்கள் மனதில் அச்சம் நீங்கிச் சிறிது அமைதியுண்டாயிற்று. அதஞல்

சுப்பன் மிகவும் வருந்திக் கேசவன் முகத்தைநோக்கி, "தந்தையே! நாம் திருட்டு முதலிய கொடுந்தொழில்களைப் புரிந்து திரிந்தாலும் முன்னே நல்ல ஆகாராதிகளையுண்டு சௌக்கியமாகவே யிருந்தோம்: இப்போது வயிற்றுக்கு ஆகாரம்கூட அகப்படாமல் மிகுந்த கஷ்டப்படுகின்றோம்; இஃதென்ன காலவித்தியாசமோ தெரியவில்லையே; காலையில் காப்பியுண்டா? ரொட்டியுண்டா? எதுவும் கிடைக்காமல் நாம் தளர்ச்சியடைகின்றோமே" என்று மொழிந்தான். அதைக்கேட்டுக் கேசவன், "புத்திரனே நாம் முந்தி எண்ணத்தொலையாத அக்கிரமங்களைச் செய்து கொண்டு திரிந்ததனாலேயே இக்கதிக்காளாயினோம்; அப்படியிருந்தாலும், தெய்வ சிந்தனையே இல்லாதிருந்த நாம், அந்தக் காட்டு மிராண்டிகளிடம் அகப்பட்டிருந்தபோது கடவுளைச் சிந்தித்தபடியால் பல ஆபத்துகளில் சிக்கியும் உயிராவது தப்பியிருக்கின்றோம்; இப்போது ஆகாரம் கிடைக்காததற்காக வருந்தவேண்டியதில்லை. ஆபத்துக்களில் தவறியதற்கு மிகுந்த சந்தோஷப்படவேண்டும். ஆகாரம் அகப்படாவிட்டாலும் எதையேனும் தின்று ஜீவித்துக்கொள்ளலாம்; உயிர் போய்விட்டால் அதை மீண்டும் பெறமுடியாது; ஆதலால், நம்மை ஆபத்துக்களினின்றும் நீக்கிக் காப்பாற்றிய கடவுளைச் சிந்தனைசெய்து கொண்டே வா; அவர் கிருபையால் நாம் சீக்கிரத்தில் ஒரு ஆதரவை யடையலாம்; இங்கே காடு நீங்கிச் சமவெளி தோன்றுவதால் சமீபத்தில் ஜனசஞ்சாரமுள்ள இடம் அகப்படக்கூடும். ஆனால், இனி இந்தப் பக்கத்திலிருக்கும் ஜனங்கள், அந்தக் காட்டு மிராண்டிகளைப் போன்றவர்களாயிருக்கமாட்டார்கள்; இங்கே தின்பதற்குரிய காயோ கிழங்கோ கனியோ அகப்படுமாவென்று தேடிப்பார்; ஏதேனும் அகப்பட்டால் அதைத் தின்று விரைவில் வழி

நடக்கலாம்" என்று சொன்னான். சுப்பன் நான்கு பக்கங் களிலும் திரும்பிப் பார்த்தான். ஒரு பக்கத்தில் பசுமை யான குத்துச் செடிகள் அடர்ந்து தோன்றின. அவற் றைப் பார்த்ததும் சுப்பன், கேசவனிடத்தில், "அப்பா! அதோ பசுமையான செடிகள் தோன்றுகின்றன; அங்கே சென்றால் ஆகாரப் பொருள்கள் கிடைக்கக்கூடும்" என்றான்.

இருவரும் அங்கே சென்றார்கள். அதிர்ஷ்ட வசமாய் அந்தச் செடிகள் ஆள் வள்ளிக்கிழங்குச் செடிகளாயிருந் தன. அவை எவராலும் வைத்து உண்டாக்கப்படாமல் இயற்கையாக உண்டானவைகள். அவற்றைக் கண்டவுடன் அவர்கள் ஆவலோடு அடியிற் பறித்தார்கள். பெரிய பெரிய ஆள்வள்ளிக் கிழங்குகள் அகப்பட்டன. அவர்கள் இரண்டு வீசை கிழங்குகளுக்குமேல் தோண்டி யெடுத்து அங்கே ஓடிக்கொண்டிருந்த சிறு கால்வாயிலுள்ள ஜலத் தில் போட்டுக் கழுவியெடுத்து அவற்றை நெருப்பில் சுட் டுத் தின்னலாமா வென்று யோசித்தார்கள். அங்கே நெருப்பேது? அதனால் பச்சைக் கிழங்குகளையே வயிறு நிறையத்தின்று தண்ணீரைக் குடித்தார்கள். அவர்களுக் குக் கொஞ்சம் தைரிய முண்டாயிற்று. மீதிக்கிழங்குகளை மூட்டைகட்டி யெடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அங்ஙனம் புறப்பட்டுப்போனவர்கள் வெகு சீக்கிரமாகவே பனிரண்டு மணிக்குள் அந்தச் சமவெளியைக் கடந்து விட்டார்கள். அதற்கப்பால் மணல் பிரதேசம் தெரிந்தது. அதில் நெடுந்தூரம்வரை மரமோ செடியோ புல்லோ பூண்டோ இல்லை. சுமார் மூன்றுமைலுக்கப்பால் குளிர்ந்த மரச்சோலை யிருப்பதாகத் தெரிந்தது. அது பனிரண்டு மணி நேரமாகையால் அந்த மணல்வெளி அக்கினிமய மாகவே யிருந்தது. அதில், அவர்கள் போகலாமா

போகக்கூடாதா என்று யோசித்தார்கள். போகாவிட்டால் வேறுவிதியில்லை. அங்கே தங்கியிருந்து இராத்திரி வந்தபின் போகலாமென்று நினைத்தாலோ ஏதேனும் அபாயம் நேரக்கூடுமென்று அச்சமாயிருக்கிறது. ஆதலால், எப்படியேனும் கொஞ்சம் சிரமப்பட்டாவது அந்த மணல் வெளியைத் தாண்டிவிட்டால் சௌக்கியமுண்டாகுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்தால் அவர்கள் துணிந்து அந்தமணல் வெளியில் நடக்கத் தொடங்கினார்கள். சிறிதுதூரம் வரை அவர்களுக்குச் சிரமம் தோற்றாமலிருந்தது. அதனால் அவர்கள் விரைந்து சென்று அந்தப் பாலைநிலத்தில் பாதிதூரத்தைக் கடந்துவிட்டார்கள்.

அதற்குமேல் அவர்களுக்குக் கஷ்டம்தோற்ற ஆரம்பித்துவிட்டது. மத்தியானம் ஒன்றரை மணிநேரம், சூரிய கிரணமோ நெருப்பைவாரி வீசுவதுபோல் வீசுகின்றது; கீழும் சுடுகின்றது, மேலும் சுடுகின்றது. வியர்வை ஒழுகி அவர்களுடைய உடைகளெல்லாம் நனைந்துபோய் விட்டன; நாவறண்டு போயிற்று. பிரமாண்டமான நெருப்புக் கோழிகள் ஆங்காங்கே குறுக்காக ஓடிக்கொண்டிருக்கின்றன. நெருப்புமயமான விஷத்தைக்கக்கும் பாம்புகள் பற்பல விடங்களில் சஞ்சரித்துக் கொண்டு திரிகின்றன. இன்னும் பலகொடிய விஷஜெந்துக்கள் நாலாபக்கங்களிலும் ஓடுகின்றன. இவற்றால் அவர்களுக்குச் சகிக்கமுடியாத துன்பமுண்டாய் விட்டது. அவர்களால் எரிச்சல் தாங்க முடியவில்லை. தாகம் சகிக்கக்கூட வில்லை; தண்ணீரும் கிடைக்கவில்லை. சுப்பன் கஷ்டம் சகிக்க முடியாமல் "ஐயோ! இறந்தேன்" என்று கத்தினான். கேசவனும் அத்தகைய துன்பத்தை அடைந்தான் எனினும் சத்தம்

போடவில்லை. பல்லைக்கடித்துக் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு மகனைத்தழுவி, "அப்பா; அழாதே; சிரமப் பட்டாவது இன்னும் சிறிதுதூரம் சென்று விட்டால் அந் தச்சோலையை அடைந்து விடலாம்; அதன்மேல் துன்பம் ஏற்படாது" என்று தேறுதல் கூறி மெதுவாக அழைத் துக்கொண்டு போனான். போகப்போக அவர்களுக்கு மரணாவஸ்தை யுண்டாய் விட்டது. உட்காரலா மென் றாலோ மணல் நெருப்புமயமா யிருக்கிறது. நெருப்பில் பட்ட தாமரைத் தண்டுபோல் அவர்கள் வாடிவதங்கிப் பாதி உயிர் நீங்கினவர்கள்போ லாய்விட்டார்கள். முடி வில் மாலை ஐந்துமணிக்குக் கால் தள்ளாடிக்கொண்டு அந்தமணல் வெளியைக் கடந்து முன்னே தோற்றிய குளிர்ந்த மரச் சோலையை அடைந்தார்கள். அதன் ஓரத் தில் குளிர்ந்த நீர்த்தடாக மொன்றிருந்தது. அதைக் கண்டவுடனே அவ்விருவருக்கும் போனவுயிர் மீண்டும் வந்ததுபோன் றிருந்தது. ஆவலோடு போய் அதில் வீழ்ந்தபடியே நீரைத் தொண்டை வரையிலும் பருகிவிட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு மேலுடைகளை நனைத்தபடியே ஒரு மரத்தின் நிழலிற்போய்ச் சாய்ந்துவிட்டார்கள். பசி யாலும், வெப்பத்தால் வாடிய வாட்டத்தாலும், மிகுந்த களைப்பினாலும், அவர்கள் அவ்வாறு நீரைப்பருகி மரத்தின் நிழலிற் படுத்தவுடனே ஒருவித ஆயாசத்தை அடைந்தார் கள். அதனால் அவர்களுக்கு ஒருவித மயக்கமும், நித்திரை யும் உண்டாகிவிட்டன. சிறிது நேரத்திற்குள் அவர்கள் மெய்ம்மறந்து தூங்கிவிட்டார்கள். தங்களுக்கு ஆபத்து வருமென்ற சிந்தனையோ, வேறெவ்விதமான நினைப்போ அவர்களிடத்தில் தோன்றவே யில்லை. அவர்கள் படுத்தது தான் தாமதம். தேகத்தை மறந்து விட்டார்கள். அவர் களுடைய ஆத்மாக்கள் வேறோருலகத்தில் குடி புகுந்தவை

போன்று மறைவுற்றிருந்தன. அவர்களை அப்போது என்ன செய்யினும் அவர்கள் எதையும் உணரக்கூடாத நிலையிலிருந்தார்கள்.

---

## 44—வது அத்தியாயம்.

அன்றிரவு கழிந்தது மறுநாட்காலையில் சூரியோதயமாகுந்தருணத்தில், கேசவனும், சுப்பனும் படுத்திருந்த சோலையில் அவர்கள் இல்லை. அதற்குப் பக்கத்திலிருந்த ஒரு சிற்றூரில் ஒரு வீட்டின் கூடத்தில் இருவர் அலங்கோலமாய்ப் படுத்துறங்கினார்கள். அவர்களைச் சுற்றிலும் பல ஜனங்கள் கூடி ஏதேதோ பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்களில் இருவர் இரண்டு கத்திகளைப் பளபளப்பாகத் தீட்டிக்கொண் டிருந்தார்கள். அக்கூட்டத்தார்கள் எல்லோருமே தூங்குகின்ற அவ்விருவரையும் எழுப்பவேண்டு மென்னும் முயற்சி யுடையவர்களாய்த் தோன்றினார்கள். ஒருவன், குளிர்ந்த ஜலத்தில் மெல்லிய துணியை நனைத்துக்கொண்டு அதனால், தூங்குகின்றவர்களுடைய முகத்தில் தடவினார்கள். அந்த ஈரம் பட்டவுடனே, தன்னை மறந்து மயக்கத்துடன் தூங்கிய இருவரும் விழித்துக் கொண்டார்கள். அங்ஙனம் விழித்ததும், தங்களைப் பல மனிதர் சூழ்ந்திருப்பதையும், இருவரால் கத்திகள் தீட்டப்படுவதையும் பார்த்தவுடன், "ஐயோ! இன்னுமா!" என்று கதறினார்கள். நண்பர்களே! இவர்கள் யாரோ வென்று நினைக்கவேண்டாம்; அந்தச் சோலையில் படுத்திருந்த நமது கேசவனும் சுப்பனுமே. இவர்கள் எப்படி இங்கே வந்தார்களென்றால், இவர்கள் படுத்த சிறிது நேரத்திற்குள் அவ்வூரார்களிற் சிலர் அங்கே வந்தார்கள். இவர்களைக்கண்டு, "யாரோ அன்னிய நாட்

டுக்காரர்கள் ; எக்காரணத்தினலோ மிகுந்த அவஸ்தை யடைந்து களைத்துப் படுத்திருக்கிறார்கள் ; இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று எழுப்பப் பலவிதமாகப் பிரயத்தினப்பட்டார்கள். ஒருவிதத்தாலும் முடியவில்லை. அதன்மேல் அவர்கள், இவர்களைத் தூக்கிக்கொண்டு போய் அந்த வீட்டிற் சேர்த்து இவர்கள் நன்ருகத் தூங்கித் தாமாகவே எழுந்திருக்கட்டு மென்று படுக்க வைத்துவிட்டார்கள். இவர்கள், விடிந்து நெடுநேரமாகியும் எழுந்திருக்காததனல், இவர்களை எழுப்பிக் களை தெளியும்படி இவர்களுக்கு இளநீர் வெட்டிக்கொடுக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அதனல்தான், ஒருவன், ஈரத்துணியை இவர்கள் முகத்தில் தடவி எழுப்பினன். இருவர், கத்திகளைத் தீட்டிக்கொண் டிருந்தது, இவர்கட்குக் கொடுத்தற்காகத் தென்னமரத்தில் ஏறி இளநீர் வெட்டுதற்கே. இவர்கள் நல்ல வகுப்பைச் சேர்ந்த ஜனங்கள்.

விஷயம் இப்படியிருக்க, கேசவனும், சுப்பனும் எழுந்தவுடன், இளநீர் வெட்டும் பொருட்டு அவர்கள் தீட்டிய கத்திகளைப் பார்த்து முந்தின காட்டுமிராண்டிகள் மனிதரை வெட்டித் தின்றதுபோலவே இவர்களும் கொல்வதற்கே நம்மைத் தூக்கி வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். அதனலேயே இவர்கள் அவ்வாறு பெரும்பீதியுடன் கதறினர்கள். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதுபோல் இவர்கள் முந்தியே நரமாமிசபக்ஷணிகளிடம் அகப்பட்டு அவஸ்தை யடைந்தவர்களாதலின், கத்திகளைக் கண்டவுடன் இவ்வாறு கத்தி விட்டார்கள்.

அவ்வாறு கதறவே, அவர்களெல்லாரும் "ஐயோ! நாம் சகாயம் செய்யும்போது ஏன் இவர்கள் இப்படிப் பயப்படுகிருர்கள்!" என்று அதிசயித்து, அவர்களிடம்

நெருங்கி அவர்களின் முதுகைத் தடவிகொடுத்து, "நண்பர்களே! நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள்; உங்களுக்கு நாங்கள் தீங்கு செய்யமாட்டோம்; நீங்கள் ஏதோ ஆபத்தில் சிக்கி வந்து மயங்கிக் கிடக்கின்றீர்களென்று நினைத்தே உங்களைத் தூக்கி வந்தோம்; நீங்கள் பயப்படவேண்டாம்" என்றார்கள். கேசவனும், சுப்பனும், "இவர்களும் அந்தக் காட்டுமிராண்டிகளைப்போல் முதலில் நலஞ்செய்வதுபோற் காட்டிப் பின்னே கெடுதி செய்வார்களா? அல்லது உள்ளபடியே உதவி செய்யக்கூடியவர்களா" என்ற குறிப்பு விளங்கும்படி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது அவர்கள், தங்களுக்குத் தெரிந்த பாஷையையே பேசியதால் அந்தக் காட்டுமிராண்டிகளைப்போன்ற கொடுஞ் செய்கையுடையவராயிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை கேசவனுக்குண்டாயிற்று. அதனால், அவன், 'இவர்களை நாம் நம்பலாம்' என்று சுப்பனுக்கு ஜாடையாகக் காட்டினான். அதன்மேல் இருவருக்கும் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று.

அங்ஙனம் மனதிடமுண்டாகவே அவ்விருவரும் அங்குக் கூடியிருந்தவர்களை நோக்கி, "நண்பர்களே! நீங்கள் மெய்யாகவே எங்களுக்கு உதவி செய்யக்கூடியவர்களாயிருந்தால் உங்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கூடியவர்களாயிருப்போம்; நாங்கள் ஆகாரம் சாப்பிட்டு மூன்று தினங்களுக்கு மேலாகின்றன; அதனால் எங்களுக்குப் பசியும் களைப்பும் அதிகம்; நீங்கள் ஏதேனும் முதலில் எங்களுக்கு ஆகாரங்கொடுப்பீர்களானால் நாங்கள், எங்கள் பசியைத் தணித்துக்கொண்டு அதன்மேல் எங்கள் வரலாறுகளில் முக்கியமான சிலவற்றைக் கூறுவோம்" என்றார்கள். உடனே அங்

குக் கத்திகளைத் தீட்டிக்கொண்டிருந்த இருவரும் அந்த வீட்டின் முற்றத்திலிருந்த ஒரு தென்னமரத்திலேறிப் பத்துப் பனிரண்டு இளநீர்களைப் பறித்து வந்து இரு வருக்கும் சீவிக்கொடுத்தார்கள். கேசவனும், சுப்ப னும் வயிறு பொருமளவுக்கு ஐந்தாறு இளநீர் களைப் பருகிவிட்டார்கள். அவர்களுக்கு மிகுதியாக உண் டாகியிருந்த களைப்பு உடனே நீங்கிற்று. மிக்க சந்தோஷ முண்டாயிற்று. அதன்மேல் அவர்கள் தங்களுடைய முக்கியமான இரகசியங்களை மறைத்துவிட்டுத் தாங்கள் ஏறிவந்த கப்பல் நடுக்கடலில் சேதமடைந்ததுமுதல் அது வரையிலும் நடந்த அபாயங்களையெல்லாம் கூறினார்கள். அவற்றையெல்லாம் கேட்டவுடன், அவ்வூராரனைவரும் "இப்படியும் மனிதர்க்குத் துன்பங்களுண்டாகுமோ!" என்று அதிசயித்து அவர்கள்மீது மிக்க இரக்கங்கொண்டு, அவர்களுக்கு நல்ல ஆகாரங்களையும் சாராயம் முதலிய வைகளையும் கொடுத்து மிக்க பயங்கரமானவிடத்திற் போய்ச் சிக்கியிருக்கின்றீர்கள்! இதற்குத் தெற்கிலுள்ள அப்பகுதிகள், துஷ்டமிருகங்களும், மலைப்பாம்புகளும், முதலைகளும், நரமாமிச பக்ஷணிகளாகிய காட்டுமிராண்டி களும் மிகுந்து சஞ்சரிக்குமிடங்கள். அவ்விடத்திற்குச் சென்றவர்கள் திரும்பி வருவதேயில்லை. நீங்கள் ஏதோ தெய்வ கிருபையால் தப்பி வந்திருக்கின்றீர்கள்; இனி, நீங் கள் நிர்ப்பயமாயிருக்கலாம். ஆனால், நீங்கள் எந்தத் தேசம்? என்ன காரியத்தை உத்தேசித்து எங்கே போகப் புறப்பட்டீர்கள்? உங்களுக்கு இங்கே யிருக்க விருப்பமா, வேறெங்கேனும் போக விருப்பமிருக்கிறதா? உங்களு டைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் நாங்கள் அதன் படி செய்வோம்" என்றார்கள்.

அப்போது, கேசவன், தன்னுடைய உண்மையான

வாசஸ்தலத்தையும், மற்ற விஷயங்களையும் கூறல் முடியா தாதலால், அவற்றை மறைத்துக் கூறத்தொடங்கி அவர்களை நோக்கி, "உபகாரிகளே! நாங்கள் இருப்பது பல்லவ தேசம்; இந்த ஆப்பிரிக்காதேசம் வந்து ஏதேனும்தொழில் செய்து பணம் சம்பாதிக்கலாமென்று கருதிக் கப்பலேறினோம்; எங்கள் தலைவிதியானது இப்படி முடிந்தது. இப்போது எங்களுடைய மனம் அதிக கலவரம் அடைந்திருக்கின்றன. அதனால் மனத்திலிருந்த எண்ணங்களெல்லாம் மாறிப்போயிருக்கின்றன. நாங்கள் இங்கே தங்குவதைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் நிதானமாக யோசித்துச் சொல்கின்றோம்" என்று கூறினான். அவர்கள், "அப்படியே உங்களுக்கெப்பொழுது இஷ்டமோ அப்போது அபிப்பிராயத்தைக் கூறலாம்; நீங்கள் இரண்டு தினங்கள் வரை இங்கே யிருந்து ஸ்நானபானுதிகளும், நல்ல உணவுகளும் கொண்டு உங்களுக்கேற்பட்ட சிரமங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று அவ்விருவருக்கும் சாப்பாடு முதலிய சௌகரியங்களெல்லாம் குறைவின்றி நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தங்கள் தொழில்களிற் பிரவேசித்தார்கள்.

அன்று அவ்விருவரும் நல்லுணவுண்டு பகலெல்லாம் படுத்து இளைப்பாறினார்கள். அன்றுதான் அவர்களுக்கு நிம்மதி யேற்பட்டது. அதனால் அவர்கள் பகல் முழுவதும் கவலையற்றுறங்கினார்கள். மாலை நேரத்தில் இருவரும் எழுந்து அந்த வீட்டின் பின்பக்கத்திலுள்ள தோட்டத்திற்குள் நுழைந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, மேல் நடக்கவேண்டிய விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள். சுப்பன் கேசவனை நோக்கி, "அப்பா! நாம் ஆபத்துக்களை யெல்லாம் விட்டுநீங்கி ஒரு சௌகரியமான இடத்தில் வந்து சேர்ந்தோம்; இனி

என்ன செய்யலாம்; இங்குள்ளவர்களோ மிகுந்த உபகாரிகளாக விளங்குகிறுர்கள். நாம் இவ்விடத்திலேயே தங்கி ஏதேனும் ஒரு தொழிலைப் பார்த்தால் சௌகரியம் ஏற்படுமென்று நான் நினைக்கிறேன்; நாம் இங்கேயே இருந்துவிடலாமா?'' என்று வினவினன்.

ஆப்பிரிக்காவின் அந்தப் பகுதியிலுள்ள ஜனங்களோ மிகுந்த கருப்புநிற முடையவர்கள்; ஒருவிதமான நாகரீகமில்லாத நடக்கை யுடையவர்கள்; அந்த நாட்டிலோ வெயிலின் தீக்ஷண்யம் அதிகம். சௌகரியமான தொழில் இல்லை. விசேஷ வரும்படி யில்லை; தொழில் செய்பவர்கள், ரப்பர் தோட்டங்களில்தான் கஷ்டமான வேலை செய்து சொற்ப வரும்படி தேட வேண்டும். வேறு தேசங்களில் சற்று சுகமாயிருந்து ஜீவித்தவர்களுக்கு அந்நாட்டு வாசம் பிடிக்காது. அதிலும் இவ்விருவரும் இந்திரபுரிப் பக்கம் வாசஞ் செய்துகொண்டு, திருட்டு, கொள்ளை முதலியவற்றைப் புரிந்து ஏராளமான பொருள் சேகரித்து நினைத்தபடி குடித்துச் சுயேச்சையாகச் செருக்கி மிகுந்த சௌக்கியத்தோடு திரிந்தவர்களாதலால், அங்குள்ள ஜனங்கள் நல்லவர்களாகவும், மிக்க உபகாரிகளாகவு மிருந்தாலும் அந்த அசௌகரியமான நாட்டிலிருக்க, இவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அதனல் கேசவன் சுப்பனைப் பார்த்து, "புத்திரனே! இங்குள்ளவர்கள் நல்லவர்கள் தாம்; நாம் எவ்வளவு காலம் இங்கே யிருந்தாலும் இவர்கள் உதவி யுடையவர்களாகவே யிருப்பார்கள். அப்படி யிருந்தாலும் இந்த நாடு நாம் வசிப்பதற்கு யோக்கியமானதாகத் தோற்றவில்லை. ஆதலால் இங்கே கொஞ்சநாளிருந்தாவது கப்பல் கூலிக்குச் சிறிதுபணந் தேடிக்கொண்டு கப்பலேறிப் பல்லவதேசம் போய்விட்டால் ஏதேனும் ஒழுங்கான ஒரு தொழிலைச்

செய்து ஜீவிக்கலாம்." என்முன். சுப்பன், "ஐயோ! அப்பா! அந்தப் பக்கம் நாம் போகவா? அங்கே நம்மை விழுங்குவதற்குப் பெரிய பாம்பு வாயைத் திறந்துகொண் டிருக்கின்றதே; நாம் குற்றத்தின்மேற் குற்றமாகப் பல குற்றங்களைச் செய்து வந்திருப்பதால் வாரண்டு நம்மை நல்வரவேற்பதற்கு எதிர் பார்த்துக்கொண் டிருக்குமே; நம்மைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அதிகப் பரிசு கொடுப்பதாகத் துரைத்தன விளம்பரமும் எங்கும் பரத் தப்பட்டிருக்கிறது; நம்குற்றம் இந்திரபுரியில் ஏற்பட்டிருந் தாலும் பல்லவதேசம் முதலிய எல்லா நாடுகளிலும் பரவி யிருக்கும்; நம்முடைய அங்க அடையாளங்களும் எங்கும் தெரிவிக்கப்பட்டிருக்கும்; ஆதலால், நாம் அந்தப்பக்கம் சென்றவுடனே எவரும் கண்டுபிடித்துக் கொள்வார்கள். மீண்டும் சிறைக்கூடத்திற்குப் போக நேரும்; அப்படிப் போய் அவஸ்தைப்படுவதைக் காட்டினும், சௌகரியக் குறைவாயிருந்தாலும் இவ்விடத்திலேயே வாசஞ்செய்வது நலமா யிருக்குமே" என்முன். அதற்குக் கேசவன், "மகனே! நீ சொல்வதெல்லாம் உண்மையே; எனினும் நாம் அங்குச் சென்று வியாபாரிகளைப் போல் வேடந் தரித்து யோக்கியமான வியாபாரஞ் செய்துகொண் டிருந் தால் எவரும் நம்மைக் கவனிக்க மாட்டார்கள். நம் முடைய முந்தி வழக்கத்தை யனுசரித்து தீயகாரியங்களைச் செய்துகொண்டு திரிந்தால்தான் ஏதேனுமொரு வகையில் சிக்கிக்கொள்வோம்; எப்பொழுதும் நன்மை யுடையவர் களுக்குக் கடவுள் துணைச்செய்வார்; கடவுள் சிந்தனையே இல்லாதிருந்த நான், அந்தக் காட்டு மிராண்டிகளாகிய இராக்ஷதர்களிடம் சிக்கியிருந்தபோது கடவுளை மிகவும் பிரார்த்தித்து 'இனி எப்பொழுதும் ஒரு துஷ்ட காரி யத்தை யேனும் செய்வதில்லை' என்று பிரதிக்ஞை செய்து

கொண்டேன்; அதனாலேயே நாம் பிழைத்து வந்தோம். அதிலிருந்து தீமை செய்வார்க்கு இத்தகைய துன்பங்கள் தாம் ஏற்படு மென்பதையும், நன்மை யுடையார்க்கு இத்தகைய நலங்கள் உண்டாகு மென்பதையும் விளக்கமாகத் தெரிந்து கொண்டேன்; நாம் முந்திச்செய்த தீவினைகளின் பயனாகவே இத்தனை துன்பங்களும் நமக்கு நேர்ந்திருக்கின்றன. அறிவில்லாத மூடர்களே, தெய்வத்திற் கஞ்சாமலும், பின்வரும் கெடுதியை உணராமலும் அகங்காரம் கொண்டு அடாத காரியங்களைச் செய்து அவஸ்தைக்குள்ளாவார்; இனி ஒருபோதும் நான் அவ்விதம் செய்ய மாட்டேன்; நீயும் அப்படியே நடக்க வேண்டும். இருவரும் ஒரே விதமாக நன்மையான வழியில் நடந்துவந்தால் நம்முடைய பிற்காலத்தின் வாழ்க்கை இனிதாக நடைபெறும்; அப்படி நாம் ஒழுங்காக நடந்தும் வாரண்டில் சிக்கிக் கொண்டால், துரைத்தனத்தா ரிடத்தில் இனி மேல் எவ்வித குற்றத்திற்கும் உட்படாமல் ஒழுங்கான மார்க்கத்தில் நடப்பதாக வாக்குறுதிசெய்து நல்ல நடக்கைக்கு ஜாமீன் கொடுத்து விட்டு மன்னிப்புப் பெற்று வந்து விடலாம். எப்பொழுதும் நல்ல வார்த்தைக்குப் பொல்லாப்பில்லை நாம் துணிந்து அங்கே சென்றால் உன்னுடைய சகோதரியையும் ஒரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்; என் மருமகனையும் கண்டு கொள்ளலாம்; நாம் நன்மார்க்கத்தில் திரும்பி விட்டோமென்பதை அவர்களுணர்ந்தால் மிகுதியும் மனமகிழ்ச்சி யடைவார்கள்; நமக்கும் வேண்டிய உதவி ஒத்தாசைகளைச் செய்வார்கள். இன்னமொன்றுகூட நான் நினைக்கிறேன்; என் அருமைப் புதல்வியினுடைய புண்ணியத்தாலும், மருமகன் பூபாலம் பிள்ளையுடைய நீதியாலுமே நாம் இந்த ஆபத்துகளிலிருந்து மீண்டோமென்னும் என்னம் எனக்கேற்பட்

டிருக்கின்றது. ஆதலால், இனி நாம் அவர்களுடைய மனம்போலவே நடந்து அவர்களுக்கு மனத்திருப்தியையும், கவலையற்ற வாழ்வையும் உண்டாக்கவேண்டும்; கனவிலும் களவு, கொலை முதலியவற்றை நினைத்தல் கூடாது; இதுவரையிலும் நாம் அவற்றால் பட்டபாடுபோதும்! போதும்!!" என்று கூறினான்.

இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டவுடன் சுப்பன் சற்று யோசித்து, "தந்தையே! அப்படியானால் உமதிஷ்டப்படியே நாம் செய்வோம்; இப்பொழுது முதலாவது கப்பல் சார்ஜுக்குப் பணம் தேட முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறினான். "அதைச் சுலபமாய்த் தேடிக்கொள்ளலாம்" என்று கேசவன் சொன்னான். இவ்வாறு இருவரும் பேசி முடித்துக்கொண்டதும் தங்கள் ஜாகைக்கு வந்தார்கள். இரவானதும், அவ்வூராரில் முக்கியஸ்தர்களெல்லோரும் இவர்களுடைய சௌக்கியத்தைப்பற்றி விசாரிப்பதற்கு அங்கே வந்து கூடினார்கள். அவர்களிற் சிலர், கேசவனையும், சுப்பனையும் நோக்கி, "நண்பர்களே! இனிமேல் நீங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்தீர்களா?" என்று வினவினார்கள்; அதற்கவர்கள், "துணைவர்களே! உங்களுடைய உபகார குணத்தைக் கண்ட எங்களுக்கு உம்மை விட்டுப் பிரிய இஷ்டமில்லை. எனினும், நாங்கள் எண்ணிறந்த துன்பங்களை யடைந்தபடியால் எங்கள் சுற்றத்தார்களைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பம் எங்களுக் கதிகமாக ஏற்பட்டிருக்கின்றது. ஆதலின், நாங்கள், எங்களுடைய சொந்த நாடாகிய பல்லவதேசம் போக உத்தேசித்திருக்கின்றோம். நீங்கள், எங்களுக்கேதேனுமொரு வேலை ஏற்படுத்தினால், நாங்கள் அதைச் செய்து கப்பல் சார்ஜுக்குப் பணந்

தேடிக்கொண்டு புறப்பட்டுப் போய்விடுவோம்" என்றார்கள். எல்லோரும் யோசித்து, ஒரு முடிவு செய்து கொண்டு இவர்களைநோக்கி, "நண்பர்களே! உங்களுக்கவ்வாறு விருப்பமிருக்கும் பக்ஷத்தில், நீங்கள் அதற்காக ஒருதொழில் செய்து பணம் சம்பாதிக்கவேண்டியதில்லை. பலவித துன்பங்களை அடைந்து மிகவும் இளைத்துப்போ யிருக்கின்றீர்கள். உங்களால் இப்போது வேலை செயயமுடியாது. ஆதலால் நாங்களே உங்கள் செலவுக்குப் போதுமானபணம் சேகரித்துக் கொடுக்கின்றோம். இதற்கு மூன்றாவது நாள் இத்தீவுக் கொருகப்பல் வரும். அதில் நாங்கள் உங்களை ஏற்றியனுப்புகிறோம்" என்றார்கள். கேசவனும், சுப்பனும் மிக மகிழ்ச்சியுற்று, அவர்களை நோக்கி, "நேயர்களே! நீங்கள் செய்யும் இவ்வுதவியை நாங்கள் எப்போதும் மறக்கமாட்டோம்" என்றார்கள். அவ்வூரார்கள் வீட்டிற் கிவ்வளவென்று வரி ஏற்படுத்தி ஒரு மொத்தத் தொகைப்பணம் வசூலித்து இவ்விருவருக்கும் கொடுத்தார்கள். அதன்மேல் இவர்கள் தங்களுக்கு, வியாபாரிகள் தரிப்பன போன்ற சில உடைகளும், பிரயாணத்திற்கு வேண்டிய இதரபொருள்களும் சேகரித்துக்கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமா யிருந்தார்கள். நகரங்களிலுள்ளவர்களைக் காட்டினும் நாடுகளிலுள்ளவர்களுக்குப் பரோபகார சிந்தை அதிகமுண்டு. அவர்கள் அன்னிய நாட்டார்களைக் கண்டால் அவர்களுக்கு மிக்க உதவியும், உபசாரமும் செய்வது வழக்கம். அதனாலேயே இந்நாட்டவர்கள், கேசவனையும், சுப்பனையும் முன்பின் அறியாதவர்களா யிருந்தும் அவர்களுக்கு இத்தகைய உதவிகளைச் செய்தார்கள்.

---

## 45-வது அத்தியாயம்.

மூன்றாவது நாள், அத்தீவிற்குச் சில சாமான்களை யேற்றிச் செல்வதற்கு ஒருகப்பல் வந்தது. அது, பல்லவ நாட்டிற்குச் செல்வதே. அது வந்த மறுநாள் பிரயாணமாகக் கூடியதா யிருந்தது. அந்நாளில் கேசவனும், சுப்பனும் அவ்வூராரிடம் அன்பாக விடைபெற்றுக் கொண்டு கப்பலுக்குப் போனார்கள். அவ்வூரார்களிற் சில பெரிய மனிதர்கள், அவர்களோடு சென்று பிரயாணச் சீட்டு வாங்கிக்கொடுத்து, அவர்களைக் கப்பலேற்றி விட்டுத் திரும்பினார்கள். கப்பல், நல்லநேரத்தில் பிரயாணமாயிற்று. அது, ஒரு வாரம் சென்று, பல்லவதேசம் போய்ச் சேரக்கூடியதா யிருந்தது. கேசவனும், சுப்பனும் அக்கப்பலிற் செல்லும்போது வியாபாரிகளின் உடையணிந்திருந்தார்கள். அதனால், அவர்களை, முந்திச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டுவந்து விட்டகள்ளர்களென்று ஒருவரும் தெரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் மூன்று தினங்கள் வரை யாதொரு விபத்துமின்றி அக்கப்பலிற் பிரயாணஞ் செய்தார்கள். அதனால், பல்லவதேசம் போய்ச்சேர்ந்ததும், மிக்க சௌக்கியத்துட னிருக்கலாமென்று நினைத்தார்கள். அந்தோ! மனிதர் எண்ணம் போல் காரியங்கள் எங்கே நடக்கின்றன. "ஒன்றை நினைக்கில் அது வொழிந்திட் டொன்றாகும்" என்றபடி, ஒருவன் நினைத்ததொன் றிருக்கத் தெய்வச் செயலால், மற்றொன்று நிகழ்வது உலகியற்கையன்றோ? கேசவனும், சுப்பனும் சிலதினங்கள்வரை சரியான ஆகாரமின்றியிருந்தபடியாலும், பற்பல திகில்களையும் சங்கடங்களையும் அனுபவித்தபடியாலும், உஷ்ணமிகுதியான பிரதேசங்களில் சஞ்சரித்துக்கொண்டு திரிந்தபடியாலும், இரண்டு மூன்று

தினங்கள்வரை கப்பலில் குளிர்ந்த காற்றுவீச சஞ்சரிக்கவே நான்காவது தினத்தில் திடீலென்று அவ்விருவருக்குமே சுரநோய்கண்டது. அன்று முழுவதும் வியாதி அதிகப்படவில்லை. சாதாரண நிலையிலேயே இருந்தது. அதனால் கப்பலிலுள்ள டாக்டர்களுக்கு அவர்கள் தங்களுடைய வியாதியைப் பற்றித் தெரிவிக்கவில்லை. ஆனால், ஐந்தாவது தினத்தில் நோய் அதிகப்பட்டுவிட்டது. மனிதர்களுக்கு இருக்கவேண்டிய நிலைக்குமேல் மிகுதியாய்விட்டது. அவர்களுக்கு அதனால் அடிக்கடி நினைவுதடுமாறிக்கொண்டிருந்தது. அந்நிலைமை யுண்டாய்விடவே அங்கிருந்த பிரயாணிகளில் சிலர் 'இஃதபாயமான சுரமாயிருக்கிறது' என்று உடனே கப்பலிலுள்ள பெரிய டாக்டருக்கு அதைப்பற்றித் தெரிவித்தார்கள். டாக்டர் வந்து பார்த்து அவர்களின் வியாதிக்குத்தக்க ஔடதம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

என்னமருந்து கொடுத்தும் பயன்படவில்லை. வரவர வியாதி அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஆறுவது நாள் அவர்களுக்கு ஜன்னி அதிகரித்துவிட்டது. பிரக்ஞைதவறிவிட்டது. டாக்டருக்கு அவர்கள் பிழைப்பார்களென்பதில் நம்பிக்கை யில்லை. கப்பலில் எவருக்கேனும் வியாதியுண்டாகி அது தீராத நிலைமைக்கு வந்துவிட்டால்—வியாதியஸ்தர் பிழைக்கமாட்டாரென்பது தெரிந்தால்—அவர்களைச் சமுத்திர ஜலத்தில் தூக்கிப் போட்டுவிடுவது அக்காலத்திய வழக்கம். ஆதலால், அவர்கள் பிழைக்கமாட்டார்களென்பது தெரிந்தவுடனே டாக்டர்களும், கப்பல் தலைவர்களும் ஒன்றுகூடி அவர்களைக் கடலில் தூக்கிப் போட்டுவிட வேண்டிய விஷயத்தைப்பற்றி அவர்கள் சமீபத்தில் பேசிக்கொண் டிருந்தார்கள். அத்தருணத்தில், நினைவற்றுக் கிடந்த கேசவனுக்கு ஏதோ தெய்வ சங்கல்

பத்தால் சிறிது உணர்ச்சி யுண்டாயிற்று. அங்ஙனம் தெளிவடையவே, அவர்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளில் சில, அவன் செவிகளில் வீழ்ந்தன. அவற்றால், அவர்கள், தன்னையும், தன் மகனையும் கடலில் தூக்கி யெறிந்துவிடப் போகிறார்கள் என்பதை யுணர்ந்துகொண்டான். அவன் மனதில் பெருந் திகிலுண்டாகி விட்டது. அதனால், அவன், "ஐயோ! கடவுளே! நாங்கள் எத்தனையோ ஆபத்துக்களில் சிக்கி மீண்டுவந்தும் முடிவில் சமுத்திரத்திற்கு இரையாகப் போகின்றோமே; நம்முடைய அருமைக் குமாரத்தியின் முகத்தில் விழித்து நாம் நன்மார்க்கத்தில் திரும்பிவிட்டதைத் தெரிவித்துவிட்டு அந்தப் பெண்ணின் மனதிற்குத் திருப்தி யுண்டானபின் மடிந்தாலும் நம் உயிரானது வாதனை யின்றியாவது நீங்குமே; அதற்குள் இந்தத் தீவினை நேர்ந்துவிட்டதே" என்று மனங்கலங்கி, டாக்டர் முதலியவர்களை நோக்கிப் பரிதாபமான முகத்தோடு, "ஐயா! எங்களுக்கிப்போது நினைவு வந்திருக்கிறது; ஆதலால், நீங்கள், எங்களை உயிருடனே தூக்கித் தண்ணீரில் போட்டுவிட வேண்டாம்; நாங்கள் இறந்துவிட்டால் தாராளமாகத் தூக்கிப்போடுங்கள்; நாங்கள் இறந்துபோகக் கூடியவர்களா யிருந்தாலும் எங்கள் சுற்றத்தார்களைப் பார்த்துவிட வேண்டு மென்னும் ஆவலுடையவர்களா யிருக்கின்றோம். ஆதலால், நாங்கள் சாகாமலிருந்தால் எங்களைக் கொண்டுபோய் பல்லவ நாட்டின் துறைமுகப் பட்டினமாகிய சுகுமார புரத்தின் தரும வைத்தியசாலையில் சேர்த்துவிடுங்கள்; உங்களுக்கு மெத்தப் புண்ணிய முண்டு" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

அவன் பரிதாபமான நிலையிலிருந்து தாழ்ந்த குரலுடன் அவ்வாறு மொழிந்ததைக் கேட்டவுடனே அவர்

களுக்கு இரக்க முண்டாயிற்று. அதனால், அவர்கள் அப்படியே செய்யலா மென்று தீர்மானித்துக் கேசவனிடம் அவன் விருப்பப்படியே செய்வதாகச் சொல்லிச் சென்றார்கள். அதனால் அவனுக்கு இன்னும் கொஞ்சம் தைரியமும், தெளிவும் ஏற்பட்டன. அச் சமையத்தில் சுப்பனுக்கும் சிறிது தெளிவுண்டாயிற்று. ஆனால், டாக்டர் முதலியவர்கள், அவர்களைச் சமுத்திரத்தில் தூக்கியெறிய யோசித்ததைக் கேசவன் அவனிடம் சொல்லவில்லை. சொன்னால் அவன் பீதியால் இறந்துவிடக் கூடுமென்று நினைத்தே அப்பயங்கரமான செய்தியைத் தெரிவிக்காமலிருந்தான். அப்படி இருவர்க்கும் உணர்ச்சியுண்டானவுடனே கண் கலங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே ஒன்றும் பேசாமல் மௌனமாய்ப் படுத்திருந்தார்கள்.

மறுநாள் கப்பல் சுகுமார புரத்தின் துறை முகத்தையடைந்தது. கேசவனும், சுப்பனும் அந்நகரத்தின் தரும வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள். அங்கே சேர்ந்த இரண்டு மூன்று தினங்களுக்குள், காற்று மாறுதலால் அவர்களுக்கு வியாதி கொஞ்சம் நீங்கினதுபோலிருந்தது. அவர்கள் கொஞ்சம் எழுந்து சாய்ந்து கொள்ளவும் உட்காரவும் சக்தியுடையவர்களாயிருந்தார்கள்.

---

## 46—வது அத்தியாயம்

இவர்களை இப்படியே வைத்தியசாலையில் விட்டு, இனி இந்திரபுரியிலிருந்த, லீலாள் என்னும் இராஜாமணி, பூபாலம்பிள்ளை முதலியவர்களுடைய விஷயங்களைப் பற்றிக் கவனிப்பாம்: கேசவனும், சுப்பனும் சிறைக் கூடத்தைவிட்டு வெளியேறியபின், அன்றிரவு பூபாலம்

பிள்ளையிடம் பணம் வாங்கிக்கொண்டு போனவுடனே, அவரும் இராஜாமணியும், "இனி அவர்கள் அன்னிய நாட்டிற்போய் ஏதேனும் மரியாதையான ஒரு தொழிலைச் செய்து ஜீவித்துக் கொண்டிருப்பார்கள்; இங்கே வந்து நமக்கு அவமரியாதையை உண்டாக்கமாட்டார்கள்" என்று திருப்தியடைந்திருந்தார்கள். எனினும் இராஜாமணி மாத்திரம், "இனி எப்பொழுது நம் தந்தையையும், தமையனையும் பார்க்கப் போகின்றோம்" என்று மனக் கவலையுடையவளாயிருந்தாள். உலகத்தில் ஒருவருடைய தாய் தந்தையர், சகோதரர் முதலியவர்கள் எத்தகைய தீக்குணங்களையுடையவர்களாயிருந்தாலும் அவர்க்கு, அவர்கள் மீது பக்ஷமிருப்பது இயற்கையல்லவா?

அப்படியிருக்கும்போது, கேசவனும், சுப்பனும் சிறையை விட்டுத் தப்பியோடிய மறுநாளே, அவ்விஷயம் பத்திரிகைகளில் எங்கும் பிரசுரிக்கப்பட்டது. அந்தப் பிரசுரங்களைப் பார்த்தவுடன் அந்நகரத்திலும், இதர பட்டணங்களிலும் உள்ள ஜனங்கள், அக்கள்ளர்களின் சாமர்த்திய செயல்களைப்பற்றி வியப்புடன் பேசிக்கொண்டார்கள். துப்பறிபவர்கள் வெகு நுட்பமாகத் தேடினார்கள். தஞ்சாவூர் ஹோட்டல்காரனாகிய இரங்கராவ் தான், அவர்கள் தப்பியோடுவதற்கு அனுகூலமா யிருந்தவனென்றும், அவன் மூலமாகவே, அவர்கள் சிறைக்கூடத்தைவிட்டு வெளியேறுவதற்கனுகூலமான சில கருவிகள் அவர்களுக்கனுப்பப்பட்டனவென்றும் துப்பறிபவர்கள், தக்க ஆதாரங்களோடு கண்டு பிடித்தபடியால் அவன் கைதியாக்கப் பட்டான். சிறைக்கூடத்தில் பெருக்கும் வேலையிலமர்ந்து இரங்கராவுக்கும், கேசவன் முதலியவர்களுக்கும் உளவாயிருந்த அந்தப்பெண்ணும் சிறையாக்கப் பட்டாள். முன்னே கப்பல் பாறையில் தட்டிச் சேத

மடைந்த தருணத்தில் கேசவனும், சுப்பனும் சிலதிருடர்க ளோடு படகிலேறிக் கடலிற் சென்றதற்கு முந்தியே கப் பித்தான் முதலிய உத்தியோகஸ்தர்களும், வேறு சில பிர யாணிகளும் அவ்வாறே படகிலேறித் தப்பித்துக் கொண்டு போனார்களென்றும், அவர்கள் மடிந்தே யிருப்பார்க ளென்று கேசவன் முதலியோர் பேசிக்கொண் டிருந்தார் கள் என்று முரைத்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்க லாம். அந்தக்கப்பித்தான் முதலியவர்கள், மிக்க உத்தமர் களாதலின், அந்தக்கடல் கொந்தளிப்பிலும் அபாயமின்றி மறுநாள் ஆபிரிக்கா தேசத்தின் கரையை அடைந்து அங் குள்ள மேல் உத்தியோகஸ்தர்களிடம் நடந்த விஷயங் களைத் தெரிவித்தார்கள். உடனே அவர்கள், அந்தக்கப் பித்தானோடு வேறொரு கப்பலையனுப்பி, பாறையில் மோதிய கப்பலிருக்கு மிடத்தைக் கண்டுபிடிக்கும்படி ஏற் பாடு செய்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்தது, அந்தக் கப்பலிலிருந்த பொருள்களை யெடுத்துச் செல்லவும், முக் கியமாகக் கேசவன் முதலிய திருடர்களைப் பிடித்துக் கொண்டு போகவுமே. அந்தக் கப்பித்தான், சிலமனிதர் களின் உதவியோடு அக்கப்பலை நடத்திக்கொண்டு போய்ச் சேதமடைந்த கப்பலைத்தேடி அரும்பிரயாசையில் கண்டு பிடித்துவிட்டான். அது அடிப்பாகம் உடைந்துவிட்ட படியால் பலவிதமாகச் சிதைந்து கிடந்தது. கேசவன் முதலியவர்கள் அங்கே காணப்படவில்லை. சில பொருள் களும் இல்லை. அதனால் அவன் "கேசவன் முதலியவர் களையும், மற்ற பொருள்களையும் கடலே விழுங்கிவிட்டிருக்கு மென்று முடிவுசெய்து கொண்டு, அகப்பட்ட பொருள் களை மாத்திரம் தான் கொண்டுவந்த கப்பலிலேற்றிக் கொண்டுபோய் ஆப்பிரிக்காவை யடைந்து மேலதிகாரிக ளிடம் ஒப்பித்துவிட்டு அங்கே சில தினங்களிருந்து மற்

றொரு கப்பலை நடத்திக்கொண்டு இந்திரபுரித் துறைமுகம் போய்ச்சேர்ந்து கப்பல் சம்பந்தமான தன்னுடைய வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு மேலதிகாரிகளிடம் சென்று, தான் ஆப்பிரிக்கா தேசத்துக்கு நடத்திச்சென்ற கப்பலில் ஒருகுருவும், சிஷ்யனும், வீரப்பன் என்பவனால் மரியாதையுடன் கொண்டுவந்து ஏற்றப்பட்டதையும், கப்பல் நடுக்கடலிற் செல்லும்போது அவர்கள் திருடர்களாய், கைதிகளாக அக்கப்பலில் அடைக்கப்பட்டிருந்த வேறு சில திருடர்களையும் சேர்த்துக்கொண்டு தந்திரமாகத் தன்னையும், மற்றவர்களையும் கட்டிப்போட்டு விட்டுக் கப்பலிலுள்ள பொருள்களைக் கைப்பற்ற முயன்றதையும், அத்தருணத்தில் கப்பல் அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டதையும், தாங்கள் தெய்வச்செயலாய்த் தவறிவந்ததையும், அத்திருடர் கூட்டத்தார் கப்பலிலேயே தைரியமாயிருந்ததையும், மறுபடி வேறுகப்பலோடு தேடிச்சென்றபோது அக்கப்பல் சிதைவுண்டு, அதிலிருந்த கள்ளர்களும் காணாமற் போயிருந்ததையும் கூறி, "அந்தக்குருவும், வேலைக்காரனுமாக வந்திருந்தவர்கள், இங்கே சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய பாங்கிக் கொள்ளைக்காரர்களாகிய கேசவனும் சுப்பனுமே; அவர்கள் தானென்பதை, நான் முதலிற் கண்டுகொள்ளா விடினும், பிறகு அவர்கள், கப்பலில் திருடர் தொழிலை நடத்திய சமயத்தில், முன்னரே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த அவர்களுடைய அங்க அடையாளக் குறிப்புக்களால் தெரிந்து கொண்டேன்; அவர்களும், கப்பலில் தீபாந்திர வாசத்திற்காகக் கொண்டு சென்ற மற்றதிருடர்களும் கடலில் மூழ்கி இறந்தே விட்டிருப்பார்களென்பது நிச்சயமாகத் தெரிவதால், இனி அவர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. அந்தக் கேசவனையும், சுப்பனையும் மாறுவேட மணியச்செய்து கப்

பலிற் கொண்டுவந்தேற்றியவன் வீரப்பனுதலால், அவனும் அவன்மகன் ஏழுமலையுமே, அவர்கள் சிறைச்சாலையை விட்டு வெளியேறுவதற்கு அனுகூலமா யிருந்திருப்பார் கள்" என்று தக்க ஆதாரங்களோடு மொழிந்தான். அவ னேடு கப்பலிலிருந்த பிரயாணிகளிற் சிலரும், கப்பல் வேலைக்காரரிற் சிலரும் அங்கே வந்திருந்தபடியால் அவர்க ளும், கப்பலில் நடந்தசெய்திகளை யெல்லாம் தெரிவித் தார்கள்.

இவ்விவரங்கள் தெரிந்தவுடனே வீரப்பனும், ஏழுமலை யும் முன்னரே அவர்கள்மீது சந்தேகங்கொண்டு அவர்கள் விஷயங்களைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்த துப்பறி யும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவர்களைச் சிறை செய்து விட்டார்கள். பின்னர் ஒரு தினத்தில் நியாயாதி பதியால் அவர்களுடைய குற்றங்களும், இரங்கராவ் மற் ெருரு பெண் இவர்களுடைய குற்றங்களும் விசாரிக்கப் பட்டதில், இவர்களெல்லோரும் பல பெரிய களவுகளில் சம்பந்தப்பட் டிருந்ததோடு திருடருக்கும் உடந்தையா யிருந்தார்களென்பது வெளியானபடியால் அவரவர் குற் றங்களுக்குத் தக்க சிறைவாச தண்டனை யடைந்தார்கள். கேசவனும், சுப்பனும், ஈட்டிக்கந்தன் முதலிய மற்ற திரு டர்களும் இறந்தே போனுர்களென்பது உறுதிப்பட்டு விட்டபடியால், துப்பறிபவர்கள் அவர்களைத் தேடும் வேலையை விட்டுவிட்டார்கள். கடலில் ஒரு சமயம் அவர் கள் உயிர்தப்பிப் பிழைத்து எங்கேனும் போய்ச் சேர்ந் திருந்தாலு மிருக்கலாமே என்று சந்தேகப்பட்ட சில துப் பறிபவர்களும்கூட, "அவர்கள் பிழைத்தார்களென்பதை நிச்சயமாகக் கொள்ளமுடியாது; ஆதலின், எங்கேனும் அவர்கள் வெளியானல் அப்போது பார்த்துக் கொள்ள லாம்" என்று பேசாம லிருந்துவிட்டார்கள். அதற்குத்

தக்கபடியே அவர்களின் பிற்காலச் செய்தி யொன்றும் வெளிவரவே யில்லை. இந்த விவரங்களெல்லாம் பத்திரிகைகளிற் பிரசுரமாகி யிருந்தன.

இராஜாமணியும் பூபாலம் பிள்ளையும் தினந்தோறும் பத்திரிகை படிப்பவர்களாதலாலும், கேசவன், சுப்பன் இவர்களின் செய்திகள் வெளிப்படுகின்றனவா வென்று கவனிப்பவர்களாதலாலும், பத்திரிகைகளிலிருந்து இவ் விஷயங்களைத் தெரிந்து கொண்டதும், "ஐயோ! நாம், அவர்கள் நம்மிடம் அதிகப்பணம் வாங்கிக்கொண்டு சென்றதால் இனிமேல் எங்கேனும் ஓரூரில் சென்று மரியாதையான தொழில் செய்து ஜீவிப்பார்களென்று திருப்தியடைந்திருந்தோமே; அவர்கள், தங்கள் பிறவிக்குணத்தை விட்டிருந்ததாகத் தெரிய வில்லையே. மீண்டும் கப்பலில் கொள்ளையடிக்கத் துணிந்திருக்கின்றார்கள்; மனிதர்களால் அவர்களைத் தண்டிக்க முடியாவிடினும் கடவுள் தண்டித்துவிட்டார். அவர்கள் அடியோடு கடலில் ஒழிந்துவிட்டதாகப் பத்திரிகை சமாசாரங்கள் எட்டுகின்றன. உலகத்தில் எவரையும் மதியாமல் செருக்குற்று அக்கிரமமான செய்கைகளையே செய்துகொண்டு திரிகின்றவர்களுக்கு முடிவில் நேர்வது இக்கதிதான். இதனை யுணராமலே சில மூடர்கள் பலருக்குத் தீங்கியற்றித் திரிகின்றனர்" என்று வருந்தினார்கள்.

இராஜாமணி பூபாலம் பிள்ளையை நோக்கி, "என் அருமைக் காதலரே! இப்பத்திரிகைகள் உமக்குத் திருப்தியான சமாசாரத்தைத் தெரிவித்திருக்கின்றன; ஏனெனின் உமது குடும்ப கௌரவத்திற்கு இழிவை யுண்டாக்குதற் கேதுவாயிருந்த என் தந்தையும் தமையனும் ஒழிந்தது உமக்குத் திருப்தியைத் தரக்கூடிய தல்லவா? இனிமேற்றான் உம்முடைய வாழ்க்கை, கவலையற்றதாக நடை

பெறும்; உமக்கு மனசாந்தியை உண்டாக்கத்தக்க விஷயம் நிகழ்வது எனக்கும் சந்தோஷமே; என்றாலும், அவர்கள் அயோக்கியர்களா யிருந்தாலும், பெற்ற தந்தையை, உடன்பிறந்த தமையனை இழப்பதென்றால் யாருக்குத்தான் மனம் சகிக்கும்! இனி எக்காலத்தில் அவர்களை நான் பார்க்கப் போகிறேன் ; ஐயோ! கடவுளே! இத்தகைய இழிவான குடும்பத்தில் நான் ஏன் பிறந்தேன்? எனக்கந்த மரணம் வரக்கூடாதா?'' என்று முகத்தில் துணியை வைத்துக்கொண்டு தேம்பியழுதாள்.

பூபாலம் பிள்ளைக்கு, கேசவனும் சுப்பனும் இறந்து விட்டதாகச் சமாசாரம் எட்டியதைப் பற்றி வருத்தமில்லை. இராஜாமணி கண்கலங்குவதற்கே மனங்கலங்கினர். இராஜாமணியின் கரத்தைப் பற்றிக்கொண்டு கண்ணீரைத் துடைத்துவிட்டு அன்புடன் அவள் வதனத்தை நோக்கி, "என் உண்மைக் காதலியே! நீ இவ்வாறு கண்கலக்கப் படுவதால் என் மனத்தைப் புண்படுத்துகின்றாய்; 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல எத்தகையினர்க்கும் தங்கள் சுற்றத்தார்மீது அன்பு அதிகரித்திருப்பது உலகியற்கை. ஆதலின், உனக்கும் தந்தை தமையன்மீது பக்ஷமிருக்கும். எனக்கும் அவர்களைப்பற்றி இரக்கமில்லாமலில்லை. உன்பொருட்டாகவேனும் பக்ஷம் வைத்துத்தானிருக்கின்றேன். நமக் கன்பிருப்பதற்குத் தகுந்தபடி அவர்கள் யோக்கியதையுடையவர்களாயிருந்து நமக்குக் கௌரவத்தை உண்டாக்கி யிருப்பார்களானால் எவ்வளவோ பெருமையா யிருக்கும். அவ்வாறின்றி அவர்கள் இழிவையே உண்டாக்கக் கூடியவர்களா யிருந்தார்கள். அதுபற்றி அவர்கள் ஒழிந்து போகமாட்டார்களா என்றும் நான் ஒருசமயம் நினைத்ததுண்டு; நீயும் அவ்வாறே நினைத்திருப்பாய்; என்றாலும், இப்போது

அவர்கள் ஒழிந்து போனார்களென்பது தெரிந்தவுடனே அவர்களைப்பற்றி மனம் வருந்துகின்றது; எனக்கே அப்படி யிருந்தால் அவர்களுடைய சுற்றத்தாளாகிய உனக்கு எவ்வித கவலை யிருக்கும்! ஆயினும் நம்மாலாவ தொன்று மில்லை. தெய்வச் செயலால் நேர்ந்ததற்கு வருந்துவதிற் பயனில்லை. உலகத்திற் பிறப்பவர்களெல்லோரும் இறப்பவர்களே; நமக்கும் அதேகதிதான். ஆதலின், நீ வருத்தத்தை விடு; உன்னுடைய விசனகரமான முகத்தைப் பார்த்திருக்க என்னால் முடியவில்லை; இனி அவர்களுடைய ஞாபகத்தை மறந்துவிடு" என்று தேறுதல் கூறினார். அந்த இனிய வார்த்தைகள் அவளுடைய விசனத்தை மாற்றிவிட்டன. உடனே அவள், "நம் உண்மைக் காதலர்க்கு மனவேதனை யுண்டாகும்படியான காரியத்தை நாம் செய்யலாகாது" என்று விசனம் நீங்கி யிருந்தாள்.

அத்தருணத்தில் துப்பறியும் நிபுணர்களாகிய ஆனந்தசிங்கும், ஜெயசிங்கும் பூபாலம்பிள்ளை வீட்டிற்கு வந்தார்கள். இராஜாமணியும் பூபாலம்பிள்ளையும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். அவர்களைநோக்கி,

**ஆனந்தசிங்கு:**—நாங்கள், உங்கள் கௌரவத்தை அவர்கள் கெடுத்து விடாமலிருப்பதற்கான சில வாக்குறுதிகளை அவர்களிடம் பெற்றுக்கொண்டு அவர்களைச் சிறைச்சாலையில் சேர்த்தோம்; அப்படிச் செய்தும் அவர்கள் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்கள்; அதனால் உங்களுக்கு கௌரவக் குறைவையுண்டாக்கி விடுவார்களென்றே நாங்கள் நினைத்தோம்; ஆனால் அவர்கள், தெய்வச் செயலால் சமுத்திரத்தில் இறந்தொழிந்தார்கள்; அவர்களுக்குத் துணையாயிருந்தவர்களும் தண்டிக்கப்பட்டொடுங்கினார்கள். இனி உங்

கள் குடும்பத்திற்கு எவ்வளவும் இழிவு வராதென்று நாங்கள் நினைக்கிறோம்.

பூபாலம்பிள்ளை:— இனி எங்களுக்கு எவ்வித இழிவும் ஏற்படமாட்டாது. ஆனால், அவர்கள் சுற்றத்தார்களென்ற பாசத்தால், அவர்களுடைய பிரிவு குறித்து மிக்க மனக் கவலையுண்டாகின்றது; இராஜாமணிக்கு அவர்கள் தந்தையும் தமையனுமாதலின் அவள் என்னைக்காட்டிலும் பதின்மடங்கதிமாக வருந்துகிறாள்.

ஆனந்தசிங்கு:—அவர்கள் உமது மனைவியின் சுற்றத்தார்களென்று நினைத்தே நாங்களும் அவர்களுடைய கொலைக் குற்றத்தை வெளிக்குக் கொண்டு வராமல், அவர்களால் உங்களுக்குக் கௌரவக் குறைவு நேராதிருக்கும்படி அவர்களிடம் வாக்குறுதி பெற்று, அவர்களின் மற்ற குற்றங்களைமட்டும் வெளிப்படுத்தி அவர்களைக் கைதியாக்கிச் சிறைப்படுத்தினோம். அம்மட்டில் உங்களுக்குத் தொந்தரவில்லாமலிருக்குமென்று நினைத்தோம்; ஆனால் மீண்டும் அவர்கள் சிறைச்சாலையைவிட்டுத் தப்பித்துக் கொண்டு போகவே அப்பேர்ப்பட்டவர்கள் இனி எப்பொழுதும் அவமரியாதையையே மேலும்மேலும் உண்டாக்கிக்கொண் டிருப்பார்களென்று கவலை கொண்டோம். முடிவில் அவர்கள் கடலில் ஒழிந்தார்கள் என்றதைக் கேட்டதே எல்லாக் கவலையும் ஒழிந்ததென்று மகிழ்ந்தோம். சுற்றத்தார்கள் என்ற வகையில் எவருக்கும் கவலையுண்டாவது இயற்கைதான். ஆயினும், எவர்களாயிருந்தாலும் துஷ்டர்கள் ஒழியும் விஷயத்தில் சந்தோஷமடைவதுதான் புத்திசாலிக்கழகு.

இராஜாமணி:—நான், தந்தை தமையன் என்ற விஷயத்

தில் கவலை கொண்டாலும் மற்றொருவகையில் தங்கள் அபிப்பிராயப்படி திருப்தியே அடைந்தேன்.

இவ்வாறு சொல்லிய பின்பு ஆனந்தசிங்கும், ஜெய சிங்கும் சந்தோஷமுற்று, பூபாலம்பிள்ளையையும் இராஜா மணியையும் நோக்கி "இனி உங்களுடைய வாழ்க்கை கவலையற்றதாய் நடைபெறும்; உங்களுக்குக் கடவுள் துணைச்செய்வார்" என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

இராஜாமணி, சில தினங்கள் வரை, தன் தந்தை தமையன் மரணத்தைப்பற்றிச் சிறிது கவலை கொண் டிருந்து பின்னர் அவர்களுடைய ஞாபகத்தை மறந்துவிட் டாள். அவர்கள் சுகுமாரபுரத்தின் வைத்தியசாலையில் உயிருடன் இருப்பது அவளுக்குத் தெரியாது. இப்படி யிருக்கும்போது ஒருநாள், இராஜாமணி, தன் வாசக சாலையிலிருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். அத்தருணத்தில், தபால்காரன் ஒரு கடிதத்தைக்கொண்டு வந்து இராஜாமணியிடம் கொடுத்தான். அதை, அவள் பிரித்துப் பார்த்ததும், ஆ! என்று ஓர் அதிசயக் கூச்சல் போட்டுக்கொண்டு விரைந்தோடிப் பக்கத்தறையிலிருந்த பூபாலம்பிள்ளையிடம் கொடுத்தாள். அவர் அதைப் பார்த் ததும், "ஆ! ஆ!! இஃதென்ன இது? உன் தந்தை! உன் தமையன்! இதை எப்படி நம்புவது? இறந்தவர்கள் பிழைத்ததெப்படி? யாரோ பரிகாசக்காரர்கள் வேடிக்கை செய்திருக்கிறார்கள்; முட்டாள்கள்" என்றார்.

இராஜாமணி:— ஐயோ! என் காதலரே! இதில் சந்தேக மில்லை; இஃதென் தந்தை கையெழுத்தே; எனக்கு நன்றாகத் தெரியும். அவரே இக்கடிதத்தை எழுதி னவர்.

பூபாலம்பிள்ளை;—உன் தந்தைதானா? அப்படியானால் அவர்கள் எப்படிப் பிழைத்து வந்தார்கள் ?

இரா:—அது தெய்வச் செயலால் தான் நடந்திருக்க வேண்டும்; கடவுள் நினைத்தால் எதைத்தான் செய்ய மாட்டார் ?

இராஜாமணிக்கு வந்த அக்கடிதம் சுகுமாரபுரம்வைத்தியசாலையிலிருந்த கேசவனால் எழுதப்பட்டதே. அவன், தானும், தன்மகனும் மிகுந்த நோய்ப்பட் டிருந்தபடியால், 'இனி நாம் பிழைப்போமோ பிழைக்க மாட்டோமோ' என்று சந்தேகங்கொண்டு தன் மகளையும், மருமகனையும் பார்க்கவேண்டு மென்னும் ஆவலால் அவர்கள் உடனே புறப்பட்டுவரும்படி அக்கடிதமெழுதினான். அக்கடிதத்தில், "என் அருமைக் குமாரத்திக்கு, நாங்கள் கப்பலேறிச்சென்று எண்ணிறந்த ஆபத்துகளில் சிக்கி மீண்டும் பிழைத்துவந்து சுகுமாரபுரியின் வைத்தியசாலையில்மிகுந்த சிக்கா யிருக்கின்றோம் ; இனிச் சன்மார்க்கத்திலேயே இருக்கவேண்டு மென்று உறுதி செய்துகொண்டோம்; என்றாலும் இனி நாங்கள் பிழைப்போ மென்பதில் நம்பிக்கையில்லை. ஆதலின், நீயும், உன்கணவனும் உடனே வந்து எங்களைப்பார்த்துச் செல்லவேண்டும்; இங்ஙனம் கேசவன்" என்று எழுதப்பட்டிருந்தது. அதனால் தான் இராஜாமணியும், பூபாலம்பிள்ளையும் அவ்வாறு பேசிக் கொண்டார்கள்.

அதன்மேல் பூபாலம்பிள்ளை, இராஜாமணியைநோக்கி "அப்படியானால் நாம் சுகுமாரபுரிக்குப் போகத்தான் வேண்டுமோ ?

இராஜாமணி:—ஆம், போய்ப்பார்த்து வரத்தான் வேண்டும்; அவர்கள் ஒரு சமையம் இறந்துபோய் விட்டால் பின்னர் அவர்களைப் பார்க்கவாபோகிறோம்.

பூபா:—இச்சமையத்தில் போய்ப் பார்க்கவேண்டியது அவசியந்தான். ஒரு காரியத்திற்காகத்தான் நான் யோசிக்கின்றேன்.

இரா:—என்ன காரியத்திற்கு யோசிக்கின்றீர்கள்.

பூபா:—ஒருசமையம் நாம் அவர்களுக்குச் சொந்தக்காரர்களென்பது வெளியாகி விடுமோ என்பதற்குத்தான் நான் பயப்படுகிறேன்.

இரா:—அது அன்னிய நாடாயிருப்பதால் அவர்களையும் இன்னவர்களென்று எவரும் அறிய மாட்டார்கள்; நம்மையும் ஒருவரும் உணர்ந்துகொள்ள மாட்டார்கள்: ஆதலால் நாம் போய் விரைவில் அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடலாம்.

இதைக் கேட்டதும் பூபாலம் பிள்ளை சம்மதித்தார். பின்னர் இருவரும் சுகுமாரபுரத்திற்குப் பிரயாணமானார்கள். புகை வண்டியில் இரண்டு நாட்கள்வரை பிரயாணஞ் செய்து பல்லவ நாட்டிலுள்ள சுகுமாரபுரத்தை யடைந்தார்கள்.

---

## 47—வது அத்தியாயம்.

அங்குப் போய்ச் சேர்ந்ததும், பூபாலம் பிள்ளையும், இராஜாமணியும் ஓர் ஹோட்டலில் தங்கித் தங்கள் சாமான்களை அங்கே வைத்துவிட்டு ஆகாரமுண்டு ஒரு வண்டி பிடித்துக்கொண்டு வைத்தியசாலைக்குப் போய் உத்தியோகஸ்தர்களின் அனுமதி பெற்று உட்சென்று கேசவனும் சுப்பனும் படுத்திருந்த அறைக்குட் போனார்கள். அங்கே அவ்விருவரின் நிலைமையைப்பார்த்தபோது இராஜாமணி அடக்க முடியாத துக்க முடையவளாய்

முகத்தில் துணியை வைத்துத் தேம்பித்தேம்பி அழுது கொண்டு, "அப்பா! அப்பா!!" என்று கேசவன் பக்கத் திற்போ யுட்கார்ந்தாள். பூபாலம் பிள்ளையும் அருகில் அமர்ந்தார். அப்போது கேசவன், பரிதாபமான முகத் துடன் இருவரையும் தழுவிக்கொண்டு "பாவிகளாகிய எங் களைப் பார்க்கவந்தீர்களா! ஐயோ! என் மகன் சுப்பன்— பரலோகஞ் சேர்வதற்கு இப்போதோ பின்னையோ வென் றிருக்கின்றான்; அவனைப் பாருங்கள்" என்று கண்ணீர் விட்டழுதான். உடனே இராஜாமணியும், பூபாலம் பிள்ளை யும் அவனருகில் போய் உட்கார்ந்தார்கள். அவனுக்குப் பிரக்ஞையே கிடையாது. வைத்தியசாலையிற் சேர்ந்த இரண்டு தினங்களுக்குள் அவனுடைய வியாதி மீறிவிட்ட படியால் அவன் அந்நிலைமைக்கு வந்துவிட்டான். உடம்பில் இரத்தப் பசையே யில்லை; எலும்பும் தோலுமே யிருந்தன. அந்நிலைமையைப் பார்த்தவுடனே இராஜாமணி மனங் கரைந்து, "அண்ணா! அண்ணா!!" என்று அவன் மார்பின் மேல் கையை வைத்தாள். அவன், பிரக்ஞை யற்றுக் கிடந்தபோதிலும் அத்தருணத்தில் சிறிது தெளிவுண்டான படியால், இராஜாமணியுடைய வார்த்தைகள், யாரோ கிணற் றுக்குள் பேசுவதுபோல் அவன் செவிகளில் வீழ்ந்தன. அதனால் அவன், தன் தங்கையென்று தெரிந்துகொண் டான். உடனே கண்ணைத் திறந்து பார்த்தான். பேசலா மென்று நினைத்தான்; நாவெழவில்லை. ஆயினும், தனக் குண்டான அதிக ஆவலால் மிக்க சிரமத்தோடு மெல்லிய குரலால், "தங்கையே! நான் மிக்க பாதகங்களைச் செய் தேன்; உனக்கும் அளவிறந்த மனவேதனையை உண்டாக்கி னேன். முடிவில் எனக்கு நல்ல புத்தி வந்தது; இனி நான் பிழைக்கமாட்டேன்; எனக்கு பாவ மன்னிப்பு கிடைக் கும்படி நீயும் உன் கணவரும் கடவுளைப் பிரார்த்திப்

பிராக" என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்டான். அப்போது பெரிய டாக்டர் வந்து அவனைப் பார்த்து விட்டு, 'இனி இந்த ஆளை நம்புவதில் பயனில்லை' என்று சொல்லிப் போய் விட்டார். இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் விசாரத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். கேசவனும் தன்னுடைய படுக்கையில் படுத்திருந்தபடியே அவன் முகத்தைப் பார்த்துக்கொண் டிருந்தான். சிறிது நேரத்துக்குள் சுப்பனுக்கு மேல் மூச்சு வாங்கிற்று; கண்கள் சுழன்றன. அவன் தன் தகப் பனையும், தங்கையையும் பார்த்தபடியே உயிர் விட்டான். இராஜாமணி தேம்பித் தேம்பி அழுதாள். கேசவன், தன் மகன் இறந்து விட்டானென்பது தெரிந்தவுடனே ஆவி சோர்ந்துவிட்டான். ஆனால், தன் மகனிடம் வருவதற்கு எழுந்திருக்க முயன்றான். அவனால் முடியவில்லை. அதனால் அவன் படுத்திருந்தபடியே, "ஆ கடவுளே! என் மகனையும் பிரித்து விட்டாயா? இனி எதற்காக நான் பூமியிலிருக்கின் றேன்" என்று கலங்கினான். பூபாலம்பிள்ளை, 'இனி விச னப்பதிற் பயனில்லை' என்று இராஜாமணிக்கும், கேசவ னுக்கும் தேறுதல் கூறினார்.

பின்னர் வைத்தியசாலையின் உத்தியோகஸ்தர்கள் வந்து சுப்பன் சவத்தை எடுத்து அடக்கஞ் செய்யத் தொடங்கினார்கள். இராஜாமணியும், பூபாலம்பிள்ளையும் அவர்களுடன் கூடவிருந்து பிரேதசடங்கைச் நிறைவேற்றி னார்கள். அதன்மேல் கேசவனிடத்தில் வந்து, "இனி மகனைப்பற்றிச் சிந்தித்து நீர் வருந்தலாகாது; அத்தகைய கவலையை அடைந்தால் உமக்கும் அபாயம் உண்டாகும்; ஆதலால், நீர் சாந்தமான மனதுடன் இருக்கவேண்டும்" என்று தைரிய வார்த்தைகளை உரைத்தார்கள். அவன், "நாங்கள் உலகத்தில் எண்ணத் தொலையாத அக்கிரமங்

களைப் புரிந்ததால் கடவுள் எங்களை உயிருடனே வைத்துக் கொடுந்தண்டனைக்குள்ளாக்கி விட்டார்; நாங்கள் பட்ட பாடு போதும் போதும்; எங்கள் அனுபவத்தில், அக்கிரமஞ் செய்பவர்கள் ஒருபோதும் தலையெடுக்கமாட்டார்களென்பதை உணர்ந்துகொண்டோம்; எங்களோடு சேர்ந்து கொடுந் தொழில்களைப் புரிந்தவர்களெல்லோரும் அடியோடொழிந்தார்கள்; நாங்களும் உயிரோடு அடைந்த ஹிம்சைகளை நினைக்கும்போது என் ஈரற்குலை இப்பொழுதும் நடுங்குகின்றது" என்று தாங்கள் முன்னே அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு சென்றது முதல் திரும்பி அந்த வைத்தியசாலைக்கு வந்தவரையில் அடைந்த பயங்கரமான ஆபத்துக்களையெல்லாம் ஒன்றொழியாமற் சொல்லி, மேலும் "அவ்வாறு துன்பங்களையடைந்ததால் எங்களுக்கு நல்லபுத்தி வந்தது; அதன்மேல் நாங்கள் இனி ஒழுங்கான நடக்கையிற் றிரும்பித் தெய்வசிந்தனையோடிருந்து உங்களுக்கும் திருப்தியை யுண்டாக்கவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டோம்; அதனாலேயே இந்த நாட்டிற்குத் திரும்பிவந்தோம்; வந்தும் எங்கள் நோக்கம் நிறைவேறாமற் போய்விட்டது; அதுதான் என்மனதிற்கு வேதனையைச் செய்கின்றது; என் அருமைமகனே இறந்துவிட்டான்; இனி நானும் பிழைக்கப்போகிற தில்லை" என்று வருந்தினான். இராஜரமணி, "அப்பா! நடந்துபோன விஷயங்களைப்பற்றி இனி வருந்துவதிற் பயனில்லை; நீர் தெய்வசிந்தனையோடிரும்; உமக்குக் கடவுள் கிருபை செய்வார்" என்று கூறினாள். அவன் அவ்வாறே செய்வதாகச் சொன்னான். பின்பு இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் மறுநாள் வந்து பார்ப்பதாகச் சொல்லி அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் ஜாகைக்குப் போய்விட்டார்கள்.

அவர்கள் போனபின்பு கேசவன் தனியே படுத்திருந்தபடியால் அவன் மனதில் எண்ணத்தொலையாத கவலைகள் கிளம்பி இருதயத்தை எரிக்க ஆரம்பித்தன. அதனால் அவனுடைய நிலைமை மாறுபட ஆரம்பித்தது. கொஞ்சம் சௌக்கியமான நிலையிலிருந்த அவனுக்கு வியாதி அதிகரித்தது. அவன் ஏதேதோ புலம்பிக்கொண்டு படுக்கையில் அங்குமிங்கும் புரண்டுகொண்டு கிடந்தான். மறுநாள் காலையில், இராஜாமணியும் பூபாலம் பிள்ளையும் அவனைப் பார்க்க வந்தார்கள். அப்போதும் கேசவன் புலம்பிக்கொண்டே கிடந்தான். இராஜாமணி திடுக்கிட்டுச் சமீபத்திற் போய் உட்கார்ந்து, "அப்பா! அப்பா!!" என்று கூப்பிட்டாள். அவன் மறுமொழி கூறவுமில்லை, அவளைப் பார்க்கவுமில்லை; அவனுக்கு ஜன்னி அதிகரித்திருந்தபடியால் உலக ஞாபகமே யில்லை. அவன் புலப்பத்திலேயே யிருந்தான். இவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குள் அப்புலப்பம் நின்றுவிட்டது. நின்ற ஐந்து நிமிஷத்தில் அவன் ஆவி யொடுங்கிவிட்டது. இராஜாமணி அதிகமாக விசனித்தழத்தொடங்கினாள். அப்போது பூபாலம் பிள்ளை அவளை நோக்கி, "காதலி! நம்முடைய கௌரவம் நிலைப்பதற்காக இவர்கள் நம்முடைய பந்துக்கள் என்பது வெளிவராமல் நாம் கூடியவரை ஜாக்கிரதையா யிருக்கவேண்டு மென்பது உனக்குத் தெரியும்; ஆதலால், இப்பொழுது நீ அதிகமாக வருத்தத்தைக் காட்டிக்கொள்ளக் கூடாது" என்றார். தன்னுடைய நாயகனது கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டி அவள் உடனே விசனத்தை அடக்கிக் கொண்டாள். அதன்மேல் அவன் சவம் எடுத்து அடக்கம் செய்யப்பட்டது.

இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் மறுநாளே புறப்பட்டு இந்திரபுரி வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சுகுமார புரத்துக்குப் புறப்படும்போது ஏதோ ஒரு காரியார்த்தமாகச் செல்வதாய் இந்திரபுரியில் ஸ்தாபித்துச் சென்றபடியால் அவர்கள் இவர்களைப் பார்ப்பதற்குச் சென்றார்களென்பது அங்குள்ள எவருக்கும் தெரியாது.

கேசவனும் சுப்பனும் சுகுமாரபுரத்தில் வந்திறந்தது இந்திரபுரி வாசிகளில் எவருக்கும் தெரியாது. ஆனந்தசிங்கும், ஜெயசிங்கும், கேசவனும் சுப்பனும் முந்தியே கடலில் கப்பல் உடைந்து இறந்துவிட்டார்களென்று கருதியிருப்பதால் அப்படியே அவ்விஷயம் உறுதிப்பட்டு விட்டுமென்று அவர்களிடத்திலும் இந்த இரகசியத்தை பூபாலம் பிள்ளையும், இராஜாமணியும் வெளியிடவில்லை. ஆனால், தங்களுக்கு மிக்க உதவியாயிருப்பவளாகிய தங்கம்மாளுக்கு மாத்திரம் தெரிவித்தார்கள். அவள், "இனிமேல்தான் இவர்கள் துன்பமற்று வாழ்வார்கள்" என்று சந்தோஷமடைந்தாள். கேசவனும், சுப்பனும் ஒழிந்தது நல்லதாயிருந்தும் இராஜாமணி இரத்தக் கலப்புடையவளாதலின் அவர்கள் சாவை நினைத்துக் கவலையடைந்து கொண்டே வந்தாள். அவளுடைய உள்ளக் கருத்தையுணர்ந்த பூபாலம் பிள்ளை ஒருநாள் அவள் முகத்தை நோக்கி, "என் பிரிய நாயகியே! நீ, தந்தை, தமையன் என்ற உரிமை குறித்து விசனத்தை அடைந்தாலும் எனக்கது மிக்க மனவேதனையை உண்டாக்குகின்றது. நாம் அவர்களுக்காக வருந்த வேண்டியவர்களே; எனினும், அவர்கள் துர்ச்செய்கைகளையுடையவர்களாயிருந்தபடியால் அவர்களை முன்னிட்டு நம்முடைய வாழ்க்கை நிம்மதியற்றதாயிருந்தது. அவர்கள் நல்வெழிக்குத் திரும்பினால் அல்லது ஒழிந்தால் மாத்திரமே நம்முடைய கவலை நீங்கக்கூடியதாயிருந்தது. அதற்கனுகூலமாகவே நல்ல காலத்தால் அவர்களுக்குக் கடைசியில் நற்குணம் ஏற்பட்டு நீதிமார்க்கத்தில் நடப்பதாக உறுதிபூண்டு இங்கே வந்திருக்கிறார்கள். அங்கிலைமையுடனே அவர்கள் பிழைத்திருந்தாலும் பிற்பட்ட காலத்தில் நமக்கு மனத்திருப்தியுண்டாகியிருக்கும். அங்ஙனமின்றி அவர்கள் அடியோடு அழிந்தே போயினார்கள். அது தெய்வச் செயலால் நடந்தது. அதுவும் நமக்கனுகூலமாகவே நடந்திருக்கிறது. ஆதலின், இனி நாம் கவலையொழிந்து வாழப் பிரயத்தனப்படவேண்டும். நமக்கு மணம் முடிந்த நாளிலிருந்து இதுகாறும் நாம் மனக்கவலைக்குள்ளேயே ஆழ்கி வந்திருக்கின்

ரேம்; இனிமேலாவது சொற்பக் காலமாவது சந்தோஷ மாகக் காலங்கழிக்க வேண்டாமா? நீ என்னை உத்தேசித் தாவது விசனத்தை விட்டுவிட வேண்டும்; என்னுடைய கௌரவத்தையும், சௌக்கியத்தையும் கருதி நீ முந்தியே பல துன்பங்களை யெல்லாம் அனுபவித்திருக்கின்றாயாத லின் உனக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய தில்லை” என்றான். தங்கம்மாளும் அவ்வாறே கூறினாள்.

இவர்களுடைய வார்த்தைகளை யெல்லாம் இராஜா மணி யோசித்தாள். எப்படியும் தன் கணவனுக்கு மனத் திருப்தியை உண்டாக்குவதே நலமென்று அவள் புத்தி யிற் பட்டது. அந்த நிமிஷத்திலேயே அவள் தன் மனத் தில் தோன்றியிருந்த விசனங்களை யெல்லாம் ஒழித்துவிட் டாள். உடனே பூபாலம் பிள்ளையை நோக்கி, “என் நாதரே! தங்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கத்தக்க எதையும் நான் இனிச் செய்யமாட்டேன்; என் விசனத்தை யெல்லாம் இப்பொழுதே ஒழித்து விட்டேன்; கடவுள் செய்ததெல்லாம் நன்மைக்காகவே; ‘வினை நட்டான் வினை யறுப்பான், தினை நட்டான் தினை யறுப்பான்’ என்றபடி அவர்கள் செய்த தீவினைப் பயனை அவர்கள் அனுபவித் தார்கள்; அதற்காக நாம் விசனிப்பது மதியீனம்தான்” என்று முகமலர்ச்சியுடன் பேசினாள். சில தினங்களில் அவர்களுடைய ஞாபகத்தையே அவள் மறந்துவிட்டாள்.

அதன்மேல் இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் மலரும் மணமும் போலவும், பாலும் நீரும் போலவும் மனமொருமித்து மகிழ்ச்சி யதிகரித்து இல்வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையானது ஆனந்தமாகவே நடைபெற்றது. செல்வம் ஓங்கி வளர்ந் தது. அவர்கள் நற்சந்ததிகளைப் பெற்று நாடோறும் இன் புற்று வாழ்ந்து வந்தார்கள். இராஜாமணி பல மேம்பட்ட குணங்களோடு விளங்கி வந்தமையால் அந்நகரத்திலுள்ள எல்லோரும் அவளைப் பலவாறு கொண்டாடினார்கள். அவள், இந்திராணிபோல மிக்க கௌரவ முடையவளாய் விளங்கி வந்தாள். இவ்விருவருக்கும் கடவுள் அனுக்கிரகம் பூரணமாக உண்டாகி யிருந்தது.

நண்பர்களே! இந்நாவலால் முக்கியமாக நாம் தெரிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள் உண்டு: மிக்க உத்தம குணம் பொருந்திய இராஜாமணி, கெட்ட கூட்டத்தார்களுடைய குடும்பத்தில் பிறந்ததால் தன்னுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், தன் தந்தை, தமையன் முதலியவர்களை நல்வழிக்குக் கொண்டு வரவும் எண்ணிறந்த துன்பங்களை யடைந்தாள். தான் பெரிய கௌரவஸ்தனை மணந்து கொண்டும் தன் தந்தையாலும், தமையனாலும் அக்கௌரவத்தை அடைய முடியாமலும், இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவளென்று வெளிக்குக் காட்டிக்கொள்ள முடியாமலும் அவஸ்தைப் பட்டாள். பூபாலம் பிள்ளை தந்தை சொல் தட்டாமல் நடந்ததோடு உத்தமமான மனைவியாகிய இராஜாமணியைக் கண்டு பிடித்து நல்ல நிலைமையில் வைப்பதற்கு எவ்வளவோ பிரயாசைப்பட்டார். இராஜாமணி தன்னுடைய கணவனின் கௌரவத்தைக் காப்பாற்றுதற்குத் தன் சௌகரியங்களை யெல்லாம் இழக்கத் துணிந்தாள். கேசவன் முதலிய போக்கிரிகள் தங்களுடைய அக்கிரமச் செய்கைகளால் அடியோ டழிந்தார்கள். இராஜாமணியும் பூபாலம் பிள்ளையும் சத்தியத்தோடு நடந்துவந்தமையால் முதலில் சில கஷ்டங்களை யடைந்தாலும் முடிவில் பெரிய கௌரவத்தையும், ஐசுவரியத்தையும் அடைந்தார்கள். இவற்றைக்கொண்டு முடிவாகக் கெட்ட குடும்பங்களில் பிறக்கும் உத்தமிகளும், உத்தமர்களும் அக்குடும்பத்தார்கள் பலவித கஷ்டங்களை அடைவார்களென்பதும், அங்ஙன மடைந்தாலும் கடவுள் அவர்களை வாழ்வித்துத் தீயவர்களை ஒழித்து விடுவாரென்பதும் உணரப்படும். சத்தியமே தலைகாக்கும்; செவ்விய குணமுடையார்க்குத் தெய்வந் துணைசெய்யும்.

ஓம் தத்ஸத்

முற்றுப் பெற்றது.

# இரத்தினபாய்

## அல்லது

## இரகசிய சங்கம்

### கடவுள் வணக்கம்.

மனமெனு மாயைப் பேயை மாய்த்தவ ரறியு மாண்மைக்
கனவொடு துயிலு நீத்தார் கங்குலும் பகலு மற்றோர்
நனவினி லெங்கு மாகி நாமரு பங்க ளின்றிக்
கனகம்போ லியாவு மான கடவுளை யகத்துட் சேர்ப்பாம்.

### 1—வது அத்தியாயம்.

தண்கடல் சூழும் வண்புவியதனிற்றொன்மையாம் சிறப்புள பன்னகரங்களுள்ளன. அவற்றுள் விண்முடிதாவித் தண்முகில் தவழும் எண்ணிலாச் சிகரங்கள் நிறைந்துள கோபுரங்களும், கண்ணொளி கவரும் வெண்ணிலவொளியும் எண்ணிலா மாடமாளிகைகளும் நிறைந்து, இந்திரன் நகரோ, குபேரன் வாழ்பதியோவெனக் காண்போர் கண்டு மயங்கும் சிறப்புடைய நவீனபுரி என்பதுமொன்று.

இத்தகைய பிரம்மாண்டமான செல்வம் பொருந்திய நகரில் நமது அபூர்வமான கதை தொடங்குகிறது. கல்வியிலும் செல்வத்திலும் மிக்க மேன்மையுற்றது இந்நகரம். கல்வியும் செல்வமும் எப்போதும் ஒருவருடைய இயற்கைக்

குணத்தை யதிக வன்மை பொருந்தியதாகச் செய்யுமே யன்றி தீய குணத்தை நல்லதாய் மாற்றும் ஆற்றலுடையன வல்ல. பணக்காரன் இயற்கையாய் நற்குணமுடையவனுயின் தன் செல்வத்தை நல் வழியில் விநியோகம் செய்வான். இயற்கைக்குணம் தீயதாயின் தீயசெய்கைகளைச் செய்து "நமக்கென்ன பணம் இருக்கிறது. யார் என்ன செய்ய முடியும்" என்று அகங்கரம் கொண்டு செருக்கித் திரிவான். கல்வியும் இத்தகையதே. இயற்கையில் நல்ல குணமுடையோன் கல்வி கற்ருல் அரசதண்டனைக்கும் கடவுள் தண்டனைக்கும் அஞ்சி நேர் நெறியி லொழுகுவான். அயோக்கியன் கல்வி கற்ருல் சட்டத்திற்குத் தப்பித்துக் கொள்ளும் விதமாய்த் தன் குற்றத்தைச் செய்வான்.

உலகில் அனேகர் கல்வி கற்றவர்களென்று மதிக்கப் படுகிருர்கள். ஆனல் கல்வியில் இரண்டுவித முண்டு. ஒன்று வயிற்றுப் பிழைப்பிற்காக பாஷைக்கல்வியையும், சட சாத்திரங்களையும் கற்பது. அக்கல்வியாலேயே இப்போது உலகில் யப். ஏ., பி. ஏ., யம். ஏ., முதலிய பட்டங்களைப் பலர் பெறுகிருர்கள். இக்கல்வி இயற்கைக்குணத்தை மாற்றும் ஆற்றலுடையதன்று. ஆன்மார்த்தக் கல்வி யொன்று மட்டுமே மனதை நல்வழியில் திருப்பக்கூடியது. மேல் நாடுகளில் முதல் கூறப்பட்ட கல்வியே எங்கு முள்ளது. ஆகையால் அங்குள்ள கள்ளர், கொலையாளிகள் முதலியவர்களில் பெரும்பாலோர் கல்வி கற்றவர்களே. அத்தகையோர் சடசாத்திரப் பயிற்சியின் உதவியோடு செய்யும் களவு கொலை முதலிய குற்றங்களைக் கண்டு பிடிப்பது மிகக் கஷ்டமே. அதைக் கண்டு பிடிப்போர் அக்கள்ளரினும் மிக்க சாமார்த்தியவான்களாகவிருக்கவேண்டும். இத்தகைய நகரில் தான் நமது கதையிற் கூறப்படும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

அந்நகரத்தின் விசாலமான ஒரு வீதியில் ஒரு மாடி வீட்டில் மேல் மாடியில் ஒரு மனிதன் உட்கார்ந்துகொண்டு ஏதோ சிந்தனையிலிருக்கிறான். அவன் பெயர் ஜகநாதன். அவன் அவ்வாறு உட்கார்ந்து சிந்தனையிலிருந்ததால் அறைக்குள் ஆள் வருவதைக் கவனிக்கவில்லை. திடீலென்று "என்ன ஜகநாதம்? கிருஷ்ணராவ் வந்தானா?" என்ற சொற்களைக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கினான். தன் முன் துரைத்தன பிரதம வக்கிலாகிய கருணாகரம் பிள்ளை வந்து நிற்பதைக் கண்டான்.

"வாருங்கள். இன்னும் கிருஷ்ணராவ் வரவில்லை. ஒவ்வொரு விநாடியும் நான் அவனை யெதிர் பார்க்கிறேன். க்ஷேமந்தானே தாங்கள்? உட்காருங்கள்" என்றான் ஜகநாதன்.

கருணாகரம்பிள்ளை ஆயாசத்தோடு ஆசனத்தில்சாய்ந்து தம் கடிகாரத்தை யெடுத்துப் பார்த்தார். ஜகநாதன் தினசரிப் பத்திரிகைக்குச் சமாசாரம் அனுப்பும் கத்துக்குட்டியாயிருக்கையில் கருணாகரம் பிள்ளை ஓர் நியாய சபையில் நியாயாதிபதியாயிருந்தார். அப்போது தான் ஜகநாதன். அவரோடு பழக்கமானான். பிறகு இராஜாங்க விஷயங்களால் இருவர்க்கும் அதிகப் பழக்கம் ஏற்பட்டு விட்டது. இப்போது அவர் நகரச் சபையில் ஒரு அவயவியாகத் தேர்ந்தெடுக்கப்பட முயற்சி செய்வதால் தான் அவருக்கு ஆயாசம் ஏற்பட்டது.

கருணாகரம்பிள்ளை மறுபடி தமது கடிகாரத்தைப் பார்த்துவிட்டு "நான் பத்மாபாய் என்ற ஒரு மாதை, சீக்கிரம் இங்கு எதிர் பார்க்கிறேன்" என்றார். அவ்வாறு சொல்லிவிட்டுப் பின்னர் அச்சமயம் ஜகநாதன் வாசித்துக் கொண்டிருந்த தினசரிப் பத்திரிகையைப் பார்த்ததும்

"உங்கள் பத்திரிகையாட்கள் பளிங்கு மாளிகையின் மர்மத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்றார்.

பளிங்கு மாளிகையில் நடந்த விஷயம் உண்மையில் பெரிய மர்மமே. அம்மாளிகையில் சுமார் பதினெட்டு வயதுடைவளும், மிக்க அழகு வாய்ந்தவளுமாகிய இரத்தினுபாய் என்ற கன்னிகை யொரு காரணமுமின்றி மாய மாய்ப் போய்விட்டிருக்கிறாள். அவள் குடும்பத்தாரும், போலீஸாரும், துரைத்தன பிரதம வக்கிலாகிய கருணாகரம் பிள்ளையும் அவளைக் கண்டுபிடிக்கத் தங்களாலான முயற்சிக ளனைத்தும் செய்தார்கள். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை.

சிலர் அவளை யாரோ களவாடிக் கொண்டு போனார்களென்று அபிப்பிராயப்பட்டார்கள். சிலர் அவள் என்ன காரணமாகவோ தற்கொலை செய்துகொண் டிருப்பாள் என்றார்கள். வேறு சிலர் இவையெல்லாமல்ல, அவள் கொலை செய்யப்பட்டாளென்றார்கள். இவ்வாறு பலபேர் பலவிதமாய் உத்தேசங்கொள்ளினும் அது ஆரம்பத்திலிருந்து ஒருவருமறியொணா மர்மமாகவே யிருந்தது.

பத்திரிகைகளிலெல்லாம் அவள் விஷயம் பிரசுரிக்கப்பட்டது. எங்கிருந்தும் எவ்வித சங்கதியும் கிடைக்கவில்லை. அவளுக்கு அறிமுகமானவர்களெல்லாம் விசாரிக்கப்பட்டார்கள். ஒரு சங்கதியும் கிடைக்கவில்லை. அவள் அங்கு காணப்பட்டாள், இங்கு காணப்பட்டாள் என்று பொய் வதந்திகள் வந்தன. கடைசியில் ஒரு உத்தேசமும் பயன்படவில்லை. அம்மர்மம் மர்மமாகவே யிருக்கிறது.

துரைத்தன வக்கில் மேற்கூறியபடி வினவிவிட்டு "பத்திரிகைக்காரராகிய நீங்கள் எப்போதும் ஒரு அபிப்பிராயம் வைத்துக்கொண்டே யிருப்பீர்கள். உன்னுடைய

அபிப்பிராயம் என்ன? நாங்கள் பத்திரிகையாட்கள் நல்ல துப்பறியும் ஆட்கள் என்று கருதுகிறோம்'' என்றார்.

ஜகநாதன் "இந்த விஷயத்தில் நாங்கள் ஒருவித அபிப்பிராயமும் கொள்ளவில்லை. இம்மாதிரி ஒரு பெண் திடீலென்று காணமற் போனபோது, அவள் எங்குச் சென்றாள் என்பது ஒருவர்க்குமே தெரியாதபோது. ஓஹோ! இதோ கிருஷ்ணராவ் வந்துவிட்டார். அவரிடம் இதை விட்டுவிடுங்கள். " என்றான்.

அச்சமயம் துப்பறியும் கிருஷ்ணராவ் அறைக்குள் வந்தான். கருணாகரம் பிள்ளை அவனை நோக்கி "நாங்கள் இப்போதுதான் பளிங்கு மாளிகையின் விஷயமாய் உன்னைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தோம். உன்னுடைய அபிப்பிராயமென்ன?'' என்றார்.

கிருஷ்ணாராவ்:—"என்? தங்கள் அபிப்பிராயம் எப்படி யிருக்கிறதோ அப்படித்தான் என்மனதிலு மிருக்கிறது. இது கண்டுபிடிக்க உங்களுக்கு மிக்க கஷ்டமாய்த் தோன்றும் விஷயங்களில் இதுவும் ஒன்று என்று உங்களுக்குத் தோன்றா விட்டால் தாங்கள் இங்குவரமாட்டீர்கள். இத்தகைய மர்மங்களைக் கண்டு பிடிப்பதில் எனக்குச் சாதாரணமாய்த் தோன்றும் உற்சாகமன்றி, இதில் ஆச்சரியமான சங்கதிகள் வெளிவருமென்று புலப்படா விட்டால் இப்போது தாங்கள் என்னிடம் இதை யொப்பிப்பதற்கு இங்கு வந்திருப்பதை யறிந்து அதையேற்றுக்கொள்ள நான் ஆயத்தமாய் வரமாட்டேன்'' என்றான்.

கிருஷ்ணாராவ் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொண்டதை யறிந்ததும் வக்கீல்

கருணாகரம் பிள்ளைக்குத் தம்தலைப்பாரம் கழிந்ததுபோல் மனதில் கலக்கமொழிந்து சந்தோஷமுண்டாயிற்று. அவர் நகைத்துக்கொண்டே "கிருஷ்ணராவ்! நீ யாவர் உள்ளக் கருத்தையு மறியும் மந்திரவாதியே" என்றார்.

கிருஷ்ணராவ்:—"மந்திரம் ஒன்றுமில்லை. முதலாவது இவ் விஷயத்திற்காகத் தாங்கள் கஷ்டப்பட்டுக் கொண் டிருப்பது எனக்குத் தெரியும். இரண்டாவது உங்கள் இலாகாவிற்கும் போலீஸ் தலைமையிடத்திற்கும் இப் போதிருக்கும் மனஸ்தாப நிலைமையில் தாங்கள் இதற்காகப் போலீஸார் உதவியைக் கோரமாட்டீர் கள் என்றறிவேன், தங்களுக்கு வெளியாள் யாரே னும் வேண்டும். அந்த ஆள் நாமாகவே யிருப்போ மென்று நான் விரும்பினேன். இந்த விஷயம் முழு மையிலும் அதிசயமான சங்கதிகளிருக்கு மென்ற எண்ணத்தால் எனக்கு இதில் விருப்பமுண்டாயிற்று. அந்தோ! பாபம்! அந்த இரத்னபாய் விஷயத்தில் எனக்கு மிக்க இரக்கமா யிருக்கிறது. அவ்வளவே சங்கதி" என்றான்.

கருணாகரர்:—"நீ கூறுவது உண்மையே. இப்போது நான் நுழைந்திருக்கும் இப்போராட்டம் என் ஆயுள் வரை விடாது. இவற்றோடு ஜனங்கள் இந்த இரத்ன பாயைக் கண்டுபிடிப்பது என்பொறுப்பென்று எண் ணிக்கொண் டிருக்கிறார்கள். இன்று அப்பெண்ணின் தாய் வந்து என்னைக்கண்டாள். இதுவரையில் தெரிந் திருப்பதற்குமேல் அதிகமாக அவள் ஒன்றும் கூறக் கூடவில்லை. இரத்னபாய் மிக்க வசீகரமான பெண். அக்குடும்பம் தாழ்ந்த நிலைமையி லிருந்தாலும் மிக்க உயர்வானகுடும்பம். அப்பெண், குழந்தைப்பருவத்தி

லிருந்து மிக்க நாணயமாய் வளர்க்கப்பட்டு வந்தாள். அவளுடைய தந்தை பிறந்தது முதல் அவள் வேலைக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அத்தகைய பெண்ணுக்கு அது எவ்வளவு கஷ்டமாகத் தோன்றுமென்பது உனக்குத் தெரியாததல்ல.'' என்று கூறிக்கொண்டே இரத்னாபாயின் புகைப்படம் ஒன்றையெடுத்து மேஜைமேல் வைத்தார்.

இரத்னாபாயின் படம் இன்னும் பத்திரிகைகளில் வெளியிடப்படவில்லை. அப்படத்தில் கூட அவள் தன் கரியகூந்தலை மிக்க ஒழுங்காய்ச் சீவி அழகுபெறக் கட்டியிருப்பதும் அவள் உடையணிந்திருக்கும் நேர்த்தியும் அவள் பார்வையின் வசீகரமும் நன்குவிளங்கின. அவள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல வென்பது நன்றாகப் புலப்பட்டது. அவளுடைய பரந்து நீண்ட கண்களில் ஸ்காந்த சக்திபோல் காண்போர் மனதை யிழுக்கத்தக்க ஒரு விதமான பார்வை ஜொலித்தது. அவள் முகத்தின் வசீகரமும் கம்பீரமும் எதிரிலுள்ளோர் பார்வையை யிழுக்கத் தக்க விதமாக அமைந்திருந்தது. இவள் திரண்ட செல்வத்தை யனுபவிக்கத் தகுதியானவள் என்று புலப்பட்டது. லக்ஷ்மியின் கடாட்சத்தில் ஏதோ சற்று பிசகுண்டாகி யதனாலேயே இவள் அந்த நிலைமையிலிருக்க நேர்ந்ததென்றே யாவரும் கருதுவார்கள்.

இரத்னாபாய் காணாமற் போனதைப் பற்றிப் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த ஒரு விஷயத்தை ஜகநாதன் வாசித்துக்கொண் டிருக்கையில் தான் கருணாகரம் பிள்ளை வந்தார். அவன் அவ்விஷயத்தைப்பற்றிக் கருணாகரரிடம் ஆலோசனை செய்யத் தொடங்குகையில் கிருஷ்ணாராவ் வந்தான். ஆகையால் அதைப்பற்றி ஜகநாதன் பின்வருமாறு கிருஷ்ணாராவையே கேட்கத் தொடங்கினான்:

"கிருஷ்ணராவ்! நீ சாத்திர ஆராய்ச்சியுடைவனா யிற்றே. இரத்னபாய், நினைவழிந்து போனவளாய் இருக்கக் கூடுமோ? இப்பத்திரிகையில், மனோதத்துவ சாத்திர ஆராய்ச்சியுடைய ஒருவன் அவ்வாறு வாதிக்கிறான். இவ்வாறு திடீலென்று மனிதர் ஒரு காரணமுமின்றிக் காணாமற் போயிருக்கிறார்கள். போலீஸாராவது வேறு யாராலாவது கண்டு பிடிக்க முடியாதபடி போய் விடுகிறார்கள். அவர்கள் நடக்கையில் ஒரு குற்றமும் காணப்படுவதில்லை. பணம் அபகரிக்கக் களவாடப்பட்டவர்கள், பணத்திற்காகக் கொலைசெய்யப்பட்டவர்கள் ஆகிய இத்தகையோரையன்றி மற்றவர்களைப்பற்றியே யிப்போது பேசுவது. அப்படிக் காணாமற் போனவர்களில் சிற்சிலர் பிறகு புத்தி சபலத்தால் தற்கொலை செய்துகொண் டிருக்கிறார்கள். எங்கோ சிலர் கொலை செய்யப்பட்டுமிருக்கிறார். ஆயினும் திடீலென்று நினைவை அடியோடிழந்து அதனால் காணாமற் போனவர்களுமிருக்கிறார்கள் என்பதும் கூறப்படுகிறது. இரத்னபாய் விஷயம் அத்தகையதாகத்தான் இருக்க வேண்டுமென்று இந்த ஆள் அபிப்பிராயப்படுகிறான். நீ யிதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான்.

கிருஷ்ணராவ்:—"சாத்திரத்தைப் பற்றிப் பேசும்போது இந்த ஆள் கூறும் நியாயப்படி இது சரிதான். ஆனால் துப்பறிவது அதைக் கொண்டல்ல. இம்மாதிரி மறைந்து போனவர்களில் சிலர் நினைவிழந்ததாற் போய்விட்டார்கள் என்பதாலேயே இவளும் அப்படித்தான் சென்றாள் என்று தீர்மானித்து விடலாகாது. நமக்கு தத்தாட்சிகளும் ருசுக்களும் வேண்டும். வெறும் உபதேசங்கள் உதவா" என்றான்.

186528
தமிழ்நாடு ... கற்பக நூலகம்
சென்னை-600 030

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல்விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

## (2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிருபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய **முஷ்டிக்கரம்** என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. **இந்திராபாய்** பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணுபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பதின்மூன்று வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருகிறது; டிம்மி 8-பக்க அளவில் 56-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம் தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும் நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும் ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras